
DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca



Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc

PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing

Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP

UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ KUMAR 416.843.3333 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES

Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services

Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY



21ம் ஆண்டில்...
27 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN
# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

$1.00 416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

உதயம் 1504 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 31, 2025


# மறைந்த மாவை சேனாதிராஜாவிற்கு தமிழ் தலைவர்கள் இறுதியஞ்சலி



- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன் -

இலங்கையின் தமிழ் அரசியல் களத்தில் நீண்ட கால அனுபவத்தை கொண்ட மாவை சேனாதிராஜா என அறிமுகம்கொண்ட சோமசுந்தரம் சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வுகள் 2ம் திகதி ஞாயிறு மாலை இடம்பெறவுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் தலைவரான மாவை சோ.சேனாதிராஜா, 1942 ஜனவரி 29, அன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காலமானார்.83 வயதான இவரின் இழப்பு தமிழ் அரசியல் வரலாற்றில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதாக பதிவிடப்படுகின்றது. தமிழர் உரிமைகளுக்காக தொடர்ந்து தனது வாழ்வை அர்ப்பணிக்கப்பனித்து விடுதலைப் பயணத்தில் பயணித்தார். 1942 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த சோமசுந்தரம் சேனாதிராஜாவே உலகளவில் ”மாவை” என்று அழைக்கப்பட்டார். (தொடர்ச்சி 21ம் பக்கம்)

# சைவப் பெருமக்களுக்கு ‘முருகன் குடிகொண்ட கதிர்காமப் பதி’ என அறியப்பெற்ற கதிர்காமம் ஆலயத்தில் முதற்தடவையாக பிரதிடை செய்யப்படவுள்ள வள்ளியம்மை – தெய்வயானையம்மை சமேத முருகப் பெருமான் விக்கிரங்கள்

கனடா வாழ் “இந்து மதக்காவலர்,, தொழிலதிபர், சுகுமார் கணேசன் அவர்களின் உபயமாக இந்த திருப்பணி மிகுந்த பொருட்செலவில் நிஜமாகியுள்ளது.”





திரு. சுகுமார் கணேசன்

இலங்கையில் முருகன் வீற்றிருக்கும் திருத்தலம் என்றவுடன் முதலில் எமது மனக்கண்ணின் முன்னால் தோன்றுவது கந்தனின் கதிர்காமம் என்னும் புனிதத் தலமே ஆகும்.

தென்னிலங்கையில் மாணிக்க கங்கைக் கரையில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் கதிர்காமக் கந்தனை, சைவர்கள் சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலம் தொடக்கம் எமது அடியார்கள் வழிபட்டு வந்திருக்கிறார்கள். பக்தர்களால் பெருநம்பிக்கையுடன் வழிபடப்படும் கதிர்காம முருகப் பெரு-மான் மீது, காலத்துக்கு காலம் பாடப்பட்ட தோத்திரப் பாடல்கள் எண்ணில் அடங்காதவை. தென்னிலங்கையிலே வீற்றிருந்து அருள் பாலிக்கும் குமரக்கடவுளான கதிர்காமக் கந்தனை தரிசித்து அருள் பெறும் பொருட்டு, இந்தியாவில் இருந்தும், வட இலங்கை மற்றும் இலங்கையின் ஏனைய பாகங்களில் இருந்தும் கதிர்காமத்திற்கு பாத யாத்திரை செல்வது வழி வழியாக வந்த மரபு ஆகும்.

அவ்வாறான முருகன் குடிகொண்டதாக வணங்கப்பெற்று வந்த வரலாற்றுப் புகழ் மிக்க ஆலயத்தில் விக்கிரங்கள் எதுவும் இல்லாமல் வழிபாடுகளும் பூஜைகளும் இத்தனை நூற்றாண்டுகளாக இடம்பெற்றுள்ளன என்பதை எம்மால நம்ப முடியுமா? (தொடர்ச்சி 16ம் பக்கம்)


கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!

இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம்.
January 21 தொடக்கம் ஒரு வார காலம் நீங்கள் கியுபாவில் தங்கியிருக்கலாம். கட்டணம் $1,300 மட்டுமே!
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd fl) Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்காார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






## காப்புறுதி மற்றும் நிதி சம்பந்தமான சேவைகளுக்கு இலவசமாக ஆலோசனை வழங்கப்படும்

**416.892.3249**

"JOIN OUR TEAM HIRING NEW ADVISORS! TRAINING PROVIDED!"

**GTS Life Insurance & Investments Inc.**

- Life Insurance
- Mortgage Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Health Insurance
- Travel Insurance
- Retirement & Estate Planning
- Tax Sheltered Savings & Investments
- RRSP, RESP, RIF and LIF
- Segregated Funds
- Business Protection
- Long Term Care



குரு தேவராஜன்
B.Sc.(B.E), M.Sc (Arch)

**GURU Thevarajan**
Insurance Advisor B.Sc.(B.E), M.Sc (Arch)

**416.892.3249**
Email: **tnkuru@hotmail.com**

313 - 2100 Ellesmere Road, Scarborough, ON M1H 3B7
Tel: 416.754.9492 & 416.754.7251 Email: gtslife123@gmail.com
www.gtslifeinsurance.ca



## VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**






**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கனடாவின் முக்கிய தேசியக் கட்சிகளில் ஒன்றான லிபரல் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தமிழ் மக்களுக்கும் உண்டு!

கனடாவின் முக்கியமான தேசியக் கட்சிகளில் ஒன்றான லிபரல் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தெரிவுக் கூட்டம் இன்னும் சில வாரங்களில் நடைபெறவுள்ளது. மத்திய லிபரல் கட்சியின் தற்போதைய அரசாங்கத்தில் எமது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரான ஹரி ஆனந்தசங்கரிக்கு இரட்டை அமைச்சுக்களை அளித்து அழகு பார்த்தவர் எமது பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள். அதற்கு மேலாக இலங்கையில் கடந்த பல வருடங்களாக இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு இலங்கை அரசுகளே பொறுப்புக் கூற வேண்டும் என்று தொடர்ச்சியாக அதிகாரபூர்வமாக குரல் கொடுத்து வரும் ஆட்சியில் உள்ள லிபரல் கட்சியும் அதன் பிரதமரும் தமிழ் மக்களின் விருப்புக்களுக்கும் தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில், கனடாவின் முக்கியமான தேசியக் கட்சிகளில் ஒன்றான லிபரல் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தெரிவுக் கூட்டம் இன்னும் சில வாரங்களில் நடைபெறவுள்ளது. இந்த முக்கிய தெரிவுத் திட்டத்தில் தங்களையும் இணைத்துக் கொண்டு தகுதியான ஒரு புதிய தலைவரைத் தெரிவு செய்யும் பொறுப்பு தமிழ் மக்களுக்கும் உண்டு என்பதை எமது தமிழ் பேசும் உறவுகளுக்கு எடுத்துச் சொல்வது “உதயன்“ ஆசிரிய பீடத்தின் கடமைகளில் ஒன்று என்ற காரணத்தோடு இவ்வார கதிரோட்டத்தை எமது வாசகர்களுக்காக நாம் படைத்தளிக்கின்றோம்.

லிபரல் கட்சியான நீண்ட காலம் கனடிய மத்திய அரசை பொறுப்பேற்று நடத்தும் பணியில் இன்று நேற்றல்ல. பல ஆண்டுகளாக ஏற்று பல சவால்களுக்கு மத்தியில் கனடிய தேசத்தையும் அதன் மக்களையும் வழிநடத்திச் செல்கின்றது.. எனவே மேற்படி கட்சிக்கான புதிய தலைவ-ரை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அனைத்து மொழி பேசும் அல்ல பல்லின கலாச்சாரத்தைப் பேணி வரும் ஏனைய இனங்களுக்கு அல்லது அந்த இனங்கள் சார்ந்த மக்களுக்கு மட்டுமே உண்டு என்பது உண்மையல்ல. எமது தமிழ் மக்கள் லிபரல் கட்சியின் ஆட்சியில் பல பலன்களை அனுபவித்தவர்கள். உதாரணமாக. கோவிட் தொற்று நோய்க் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவித் திட்டங்களை அறிமுகம் செய்து அனைத்து இன மக்களும் தங்கள் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்தது இந்த அரசுதான். எனவே கனடாவின் மத்திய லிபரல் கட்சிக்கான புதிய தலைவரை தகுதியறிந்து தேர்ந்தெடுக்கும் முக்கிய தேர்வு முறையில் நாமும் இணைந்து கொள்வது அவசியம் என்பதும் யார் புதிய தலைராக வரக்கூடியவர் என்பதையும் நாம் கலந்துரையாடல்களின் மூலம் தீர்மானித்துக் கொள்ளலாம்.

எமக்கு கிடைத்துள்ள தகவல்களின் லிபரல் கட்சியின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் **Mark Carney** “(மார்க் கார்ணி) என்னும் வேட்பாளரையே ஆதரிக்கின்றார்கள் என்பது வெளிச்சமாகத் தெரிகின்றது. குறிப்பாக எமது பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் பகிரங்கமாக தனது அறிக்கையில் மார்க் கார்ணி என்னும் வேட்பாளரையே ஆதரிப்பதாக தெரிவித்துள்ளார். அத்துடன் ஈழத் தமிழ் மக்களோடு இணைந்து எப்போதும் பணியாற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்களும் மார்க் கார்ணி அவர்களையே ஆதரிப்பதாக அறிவித்துள்ளார்கள்.
எனவே எமது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள லிபரல் கட்சி ஆதரவாளர்கள் தகுந்த ஒரு தலைவரை லிபரல் கட்சிக்கு அளிக்க அணி திரள்வார்கள் என்று நம்புகின்றோம்.!

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728



Need Assistance for your

First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?

Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?



Not to Worry!

Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி aches நீரிழிவு நோய், வயிற்றுவலி மாதவிடதய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis Asthma, Sinusitis, Rhinitis Allergies Stress, Migraine & All Types of Head- Diabetes, Gastric Pain, Ulcer Menstruation Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

Basement for Rent

Newly renovated basement apartment for rent. 2 bedroom, 1 bath, separate laundry room, full kitchen, separate entrance with parking spot.
14th Ave and 9th Line in Markham.
647-285-4856

Telemarketers Wanted

தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய Telemarketers உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு:-
416 754 9492 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் கொழும்புத்துறை வீதி-பாண்டியன்தாழ்வில். 2 பரப்புக் காணயில் கடையுடன் சேர்த்து கட்டப்பெற்ற 3 அறைகள் கொண்ட அழகிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **437 441 5699**
அல்லது மின்னஞ்சல் saitheva09@gmail.com

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# வடமாகாண கல்வி அமைச்சின் அனுமதியுடன் நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி!



வடமாகாண கல்வி அமைச்சின் அனுமதியுடன் பழைய மாணவச்சிப்பாய் அமைப்பினரால் நெடுந்தீவு பிரதேச மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி பாசைறயானது அண்மையில் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இப் பாசறையானது இரு தினங்கள் இடம்பெற்றது. அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிவானந்தர் கஜவதனனின் வழிகாட்டலில் இடம்பெற்ற நிகழ்வில் 120 மாணவர்கள் கலந்து கொண்டனர்.





பல்வேறுபட்ட அனுசரணையாளர்களின் பங்களிப்பில் இடம்பெற்ற நிகழ்வின் இறுதியில் மாணவர்களுக்கு தேசிய மாணவச் சிப்பாய் படையணியின் வடமாகாண பிரதிப் பணிப்பாளர் lt.Col. RHNP Rathnaweera அவர்களினால் சான்றிதழ் வழங்கப்பட்டது.

அமைப்பின் புதிய மைல்கல் ஒன்றாக இது வரலாற்றில் பதிவு செய்யப்படுகிறது.

# மாவை சேனாதிராஜாவின் மரணத்துக்கு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் இரங்கல்!



கொள்கை வேறு, கோட்டை வேறாக இருப்பினும் மாவை சேனாதிராஜா அண்ணா, அரசியல் களத்தில் எம்முடன் சம காலத்தில் பயணித்தவர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தானே தேர்ந்தெடுத்த தனது அரசியல் வழியில் இறுதி வரை உறுதியுடன் இருந்தவர். ஆரம்ப காலச்சூழலில் அரச நெருக்கடிகளை அடுத்தடுத்து சந்தித்தவர்.

இளமைக்காலத்தில் சிறைகளில் அடைபட்டு இன்னல்களை எதிர்கொண்டவர். சக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து தனது வழிமுறையில் குரல் எழுப்பியவர்.

ஆளுமையும் அர்ப்பணிப்பும் மிக்க மாவை அண்ணை பாரம்பரிய தமிழரசு கட்சி உறுப்பினர்களால் ஆழமாக நேசிக்கப்பட்டவர்.

எல்லோர் கனவுகளும் வெல்லும் காலம் பிறக்க உழைப்போம். இழப்பின் துயரில் வதைபடும் குடும்பத்தவர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் சகலருக்கும் ஆழ்மன ஆறுதல் என குறிப்பிடப்பட்டுள்ளது.





# கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வமத மாணவர்களின் பங்கேற்புடன் வெகு விமர்சையாக நடைபெற்ற பொங்கல் விழா!



கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட தமிழ் இலக்கிய மன்றத்தினுடைய ஏற்பாட்டின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட பொங்கல் விழாவானது 28.01.2025 செவ்வாய்க்கிழமை வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டிருந்தது.

சட்டபீட தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவர் செல்வி ஜீவிதா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.துரைராஜா அவர்களும் கௌரவ விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் எச்.டி. கருணாரத்ன அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



பல்வேறு விதமான பாரம்பரிய விளையாட்டுக்கள், கலை கலாசார நிகழ்வுகளுடன் தமிழ் இலக்கிய மன்றம் ஒழுங்கு செய்த இந்நிகழ்விலே இன,மத பேதங்களுக்கு அப்பால் அனைத்து மாணவர்களும் இணைந்து செயலாற்றியிருந்தமை முன்னுதாரணமானதொரு அம்சமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எங்களுடைய உறவுகளை பாதுகாக்கும் முயற்சிக்கு வேட்டு வைப்பதாகவே இந்திய மீனவர்களது செயற்பாடு உள்ளது — இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு!

பேச்சுவார்த்தை மூலம் இலங்கை - இந்திய மீனவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படுமாக இருந்தால் அதற்கு இரண்டு கரங்களையும் உயர்த்தி நாங்கள் ஆதரவளிக்க தயாராக இருக்கிறோம் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - சாங்கானை பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீனவர்களின் தலைவர்களை நாங்கள் வினயமாக கேட்டுக் கொள்வது என்னவென்றால், நாங்கள் உங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு தயார். உங்களுடைய பிள்ளைகள் எங்களுடைய தொப்புள்கொடி உறவுகள், எங்களுக்கு அண்மித்த நாடு அந்தவகையில் நாங்கள் நல்ல முறையில் எங்களுடைய உறவுகளை பேணி பாதுகாப்பதற்கே முயற்சிக்கின்றோம்.

அந்த முயற்சிக்கு வேட்டு வைக்கின்ற வேலையாகவே இந்திய தமிழ்நாட்டு மீனவர்களுடைய செயற்பாடுகள் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் அரசு சார்ந்த அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கௌரவம்!




வடபிரதேச நல்லொழக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அமைச்சர் இ.சந்திரசேகரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு சங்கானையிலுள்ள வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன அலுவலகத்தில் இடம்பெற்றது.



இதன்போது விருந்தினர்கள் சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு அருகாமையில் இருந்து மாலை அணிவித்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன். ஜெ.ரஜீவன், ச.சிறீபவானந்தராஜா, வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் ஆகியோர். கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எங்களால் இயலாவிட்டால் செய்யக்கூடிய ஒருவரிடம் பதவியை ஒப்படைத்துவிட்டு வெளியேறிவிடவேண்டும் என்கிறார் வடக்கு ஆளுனர்

எங்களால் செய்ய முடிந்தால் பதவியில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் செய்யக்கூடிய ஒருவரிடம் பதவியை ஒப்படைத்துவிட்டு வெளியேறிவிடவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் பல்வேறு நிதி மூலங்கள் ஊடாக 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு 30ம் திகதி வியாழக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக தாயும் சிசுவும் ஒன்றாக இருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் வை.திவாகர், தனது தலைமை உரையில், இருக்கின்ற மனிதவளம் உள்ளிட்ட அனைத்து வளங்களையும் பயன்படுத்தி எவ்வாறு மருத்துவமனை மேம்படுத்தப்பட்டது என்பதைக் குறிப்பிட்டார்.

அத்துடன் சுகாதாரத்துறை மீது சகட்டுமேனிக்கு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், சுகாதாரத்துறை அடிமட்டத்திலிருந்து எவ்வாறு இங்கு கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதையும் அதனை அனைவரும் மறந்துவிட்டனர் என்றும் வேதனையுடன் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் முதன்மை பிரச்சினையாக ஊழல் கூறப்பட்டாலும், வினைத்திறனற்ற பணியாற்றுகையே முதன்மையானது என்று குறிப்பிட்ட மருத்துவ அத்தியட்சகர் "சும்மா இருப்பதையே" அதிகளவானர்கள் விரும்புகின்றனர் எனவும் அவர்கள் தொடர்பில் யாரும் அலட்டிக்கொள்வதில்லை என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், தனது சிறப்பு விருந்தினர் உரையில், 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தப் பதவிக்கு வந்ததாகவும் அப்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் ஓய்வுபெற்ற மூவரே மருத்துவ அதிகாரிகளாகப் பணியாற்றியதாகவும் இன்று 350 பேர் பணியாற்றுக்கின்ற நிலைமைக்கு வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார். வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை சாம்பலிருந்தே மீண்டெழுந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

மேலும் தெல்லிப்பழை, பருத்தித்துறை ஆதார மருத்துவமனைகள் ஓரளவு சிறப்பாக இயங்குகின்றமையால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நெருக்கடிக்களை குறைக்க முடிந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை மருத்துவமனைகளின் வசதிகளை அதிகரிப்பதன் ஊடாக போதனா மருத்துவமனையின் பணிச்சுமையை மேலும் குறைக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.








அத்துடன் ஆளணி மீளாய்வு அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஆளுநரிடம் அவர் கோரிக்கை முன்வைத்தார். மேலும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் திறந்து வைக்கப்பட்ட சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ஒட்டுமொத்த வடக்கு மாகாணத்துக்கும் சேவைகளை வழங்கும் எனவும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

முக்கியமாக கடந்த டிசெம்பர் மாதம் பரவிய எலிக்காய்ச்சலை இங்குள்ள மருத்துவர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் மற்றும் பொதுச் சுகாதாரத்துறையினர் இணைந்து கட்டுப்படுத்தினர் என்றும் இது தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு மிகச் சிறந்த பாராட்டைத் தெரிவித்துள்ளது எனவும் குறிப்பிட்ட அவர், இது உங்களின் அர்ப்பணிப்பான சேவைக்கு கிடைத்த வெற்றி என தெரிவித்தார்.

ஓரிடத்தின் தலைமைத்துவத்தில்தான் அதன் வெற்றி தங்கியிருக்கின்றது என்பது உண்மை. உங்கள் மருத்துவ அத்தியட்சகர் திவாகர், தெல்லிப்பழை மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகராக இருந்தபோது அதை வளப்படுத்தி திறம்ப இயக்கினார். தற்போது இந்த மருத்துவமனையை திறம்பட இயக்குகின்றார்.

அவர் முன்வைத்த கோரிக்கை நிறைவேற்றப்படும் வரையில் ஓயமாட்டார். அத்தியட்சகர் தனது தலைமை உரையில் குறிப்பிட்டதைப்போன்று அலுவலகங்களில் "சும்மா இருப்பவர்கள்" தான் இன்று அதிகமாகிக்கொண்டு செல்கின்றனர். என்னைச் சந்திக்கும் பொதுமக்களும் அதனைத்தான் சொல்கின்றனர். ஓர் அலுவலகத்துக்குச் சென்றால் இருவர் வேலை செய்வார்கள். ஏனையோர் பேசாமல் இருப்பார்கள் என்று முறையிடுகின்றார்கள். இதுபோதாது என்று எதிர்மறையாகச் சிந்திக்கும் அலுவலர்களும் அதிகமாகின்றது. "முடியாது" என்ற வார்த்தைதான் அவர்களிடமிருந்து வருகின்றனது. தாம் எதையும் எம்மால் செய்ய முடியும் என நினைக்கவேண்டும். அல்லது அதை எப்படிச் செய்யலாம் என்பதைச் சிந்திக்கவேண்டும். அப்போதுதான் நாம் முன்னேற முடியும்.

என்னை அரசியலுக்கு அழைத்துவருவதற்கு சிலர் கடந்த காலங்களில் முயற்சித்தார்கள். நான் அதை அடியோடு மறுத்துவிட்டேன். நான் ஒருபோதும் அரசியலுக்கு வரப்போவதுமில்லை. எனக்கு அந்த எண்ணமும் இல்லை.

ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நாம் மாற்றுத் திட்டங்களை தயாரிக்கவேண்டும். இந்த மருத்துவமனையின் ஏனைய தேவைகளில் எங்களால் செய்து தரக் கூடியவற்றை விரைந்து செய்து தருவோம், என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் திருமதி. ப.ஜெயராணி, பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கைக்கு விஜயம் செய்துள்ள உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம்



1974ம் நிறுவுப்பெற்று 50 ஆண்டு வரலாற்றைக் கொண்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர் ஆகியோர் வரவேற்றனர். இவரது இலங்கை விஜயம் தொடர்பாக இலங்கையின் தேசியப் பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் பல நாடுகளில் கிளைகளைக் கொண்டு இயங்கும் மேற்படி உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 50வது ஆண்டு நிறைவு விழாவை இலங்கையில் கொண்டாடும் வகையில் தீர்மானித்துள்ள கனடாவில் தலைமையகத்தைக் கொண்ட இந்த அமைப்பின் செயற்குழுவின் ஏற்பாட்டில் துரை கணேசலிங்கம் அவர்கள் இலங்கை சென்றுள்ளார்.அவர் இலங்கையில்டி தங்கியிருக்கும் 3 வாரங்கள் பல சமூகத் தலைவர்களையும் அரசியல் பிரமுகர்களையும் சந்தித்து உரையாடி. மேற்படி உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 50வது ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் ஏற்பாடுகளைச் செய்வார் என்றும் அறியப்படுகின்றது.

இதன் முதற்படியாக, உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் செயற்பாடுகளையும் வினைத்திறனையும் அதிகரிக்கச் செய்யும் முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்தவுள்ளார்.

திரு. துரை கணேசலிங்கத்தின் இலங்கை விஜயம் சிறப்பாக அமைய உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத் தலைவர் நடா இராஜ்குமார் அவர்களும் இயக்கத்தின் கனடாக்கிளையின் தலைவர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களும் அவருக்கு தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

# மாவை சேனாதிராசா அவர்கள் தமிழ் தேசியத்தின் அடையாளம்!

## தமுகூ தலைவர் மனோ கணேசன் தனது இரங்கற் செய்தியில் தெரிவிப்பு



சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதி, இலங்கை தமிழரசு தலைவர், முன்னாள் யாழ் பாஉ என்ற தகைமைகளுக்கு அப்பால், அண்ணன் மாவை, ஒரு தமிழ் தேசிய அடையாளம் என்பது நிதர்சனம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா அவர்களின் மறைவு தொடர்பில் மனோ கணேசன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மிக நீண்ட காலமாக தமிழர் ஜனநாயக சாலையில் பயணித்த, மாவை சேனாதிராசா என்ற தமிழ் தேசிய வாகனம் நின்று விட்ட சம்பவம் இன்று நிகழ்ந்தே விட்டது. பல உணர்வு மிக்க தரிப்பிடங்களையும், கடவைகளையும், தமிழ் தேசிய அரசியல் தலைவர்களுடன் நான் கடந்து வந்துள்ளேன். இதிலேயே அண்ணன் மாவையுடன் மிக நீண்ட காலமாக நான் பயணித்தும் உள்ளேன்.

இன்றைய இந்த சோகத்தில், தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் பங்கு கொள்கிறோம். எங்கள் அனுதாபங்களை அவரை இழந்து வாடும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும், அவரது கட்சிக்கும், மக்களுக்கும் தெரிவித்து கொள்கிறோம்.

# தமிழ் மக்கள் ஒற்றுமைப்படவில்லை என்றால் அனைத்து சபைகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் அபாயம் உண்டு என்கிறார் சி.அ. யோதிலிங்கம்!




தமிழ் மக்கள் ஒற்றுமைப்படவில்லை என்றால் அனைத்து சபைகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்று அபாயம் இருப்பதாக அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குனருமான சி.அ. யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உரும்பிராயிலுள்ள தனது அலுவலகத்தில் 30ம் திகதி அன்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது.

என்.பி.பி அரசு பல்வேறு வழிகளிலும் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களிடம் இருந்து. அவர்களுக்கான அனைத்து விடயங்களையும் கையாண்டு மக்கள் மத்தியில் ஓர் அரசியல் மாற்றத்தை கொண்டு வரும் வகையில் செயற்படுகின்றார்கள்.

இது ஒரு ஆபத்தான நிலைமையாகும். இதனை தடுப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று திரள வேண்டும் என்றும். இவ்வாறான நடவடிக்கை அனைத்து சிவில் சமூகங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.



# யாழ்ப்பாணம் செல்லும் ஜனாதிபதி அநுரவிடம் 20 விடயங்களை முன்வவைக்கவுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி!

ஜனாதிபதி தலைமையில் 31ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்கான விடயத்தானங்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ளார்.



இருபது முக்கிய விடயங்களை உள்ளடக்கிய விடயத்தானங்களை அபிவிருத்தி குழு கூட்ட நிகழ்சி நிரலில் சேர்ப்பதற்காக இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். போதானா வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி உடனடியாக அமைக்கப்படல்.

யாழ். போதனா வைத்தியசாலை அதிகளாவான நோயாளர்களால் நிரம்பி வழிகின்றது. பல விடுதிகளில் அவ்வப்போது நோயாளர்கள் கட்டில்கள் இல்லாத நிலையில் நிலங்களில் படுக்கின்ற நிலைமை சீர் செய்யப்படல்.

யாழ் பண்ணையில் அமைந்துள்ள காச நோய் சிகிச்சைப் பிரிவில் அடிப்படை வசிதிகள் மேம்படுத்தப்படல் வேண்டும். மயிலட்டியில் அமைந்திருந்த காசநோய் பிரிவை அந்த இடத்தில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மயிலிட்டியில் இயங்கிய காசநோய் வைத்தியசாலை தற்காலிகமாக கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இயங்குகிறது. ஆனாலும் அங்கு ஆளணிகள் எதுவும் நியமிக்கப்படவில்லை. உடனடியாக ஆளணி நியமனம் செய்யப்படல் வேண்டும்.

பண்ணையில் உள்ள மார்பாக சிகிச்சை நிலையத்திற்கென நிரந்தரமான எக்ஸ்றே றேடியோ கிறாபர் இல்லை. நிரந்தரமாக நியமிக்கப்படல் வேண்டும். தற்போது திங்கள் புதன் ஆகிய இரண்டு நாட்கள் மட்டுமே வருகின்றார்.

பண்ணையிலுள்ள மார்பாக சிகிச்சை நிலையத்தில் பரிசோதனைக்காக பெறப்படும் சளிமாதிரிகளை பாதுகாப்பாக களஞ்சியபடுத்துவதற்கான குளிர்சாதனப் பெட்டிகள் பெரும் பற்றாக்குறையாக உள்ள நிலையில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் ஐந்து நாட்களுக்குள் சோதகை செய்யப்படல் வேண்டும். ஆனால் உரிய கருவிகள் இன்மையால் ஒரு வருடங்களாக சேமிப்பில் உள்ள நிலை காணப்படுகின்றது. இந்நிலை சீர் செய்யப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெருமளவான இளையோர் போதைப் பொருள் பயன்பட்டிற்கு அடிமையாகியுள்ள நிலையில் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை புனவாழ்வளித்து மீட்டெடுப்பதற்கான புனர்வாழ்வு நிலையம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைக்கப்படல்.

யாழ் மாவட்டத்தில் கடற்தொழில்படகுகளை பாதுகாப்புக்கான கல்லணைகளை பின்வரும் பகுதிகளில் அமைத்தல்.

பருத்தித்துறை மூர்க்கம், முனை, கொட்டடி கடற்கரை, சுப்பர்மடம். இன்பர்சிட்ட கடற்கரை, சக்கோட்டை கடற்கரை, திக்கம் கடற்கரை, கொத்தியால் கடற்கரை, றேவடி கடற்கரை, ஆதிகோவிலடி கடற்கரை, தொண்டமனாறு கடற்கரை, பலாலி கடற்கரை. சேந்தான்குளம் மாதகல் கடற்கரை ஆகிய இடங்களில் படகுகள் தரித்துநிற்கும் இடங்களில் படகுகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புக் கல்லணைகள் அமைக்கப்படல் வேண்டும்.

இறக்கப்படும் நுழைவு வான்கள் நீண்டகாலமாக ஆழப்படுத்தப்படாமையினால் படகுகள் சேதமடைகின்றன. படகுகள் சேதமடைவதனை தடுக்கும் வகையில் குறித்த இடங்கள் உடனடியாக ஆழப்படுத்தப்படல் வேண்டும்.

கொத்தியால் கடற்கரையில் படகுகள் தரிப்பிடத்தில் அகழப்பட்ட மண்ணை அப்புறப்படுத்த நடவடிகை எடுத்தல்:

வல்வெட்டித்துறை கிழக்கு கிராமிய கடற்தொழில் அமைப்பினருக்குச் சொந்தமான படகுகள் தரித்து நிற்கும் பகுதியிலிருந்து அகழப்பட்ட மண் கடற்கரையில் குவிக்கப்பட்டுள்ளது.

மண்ணை அகற்றுவதற்கான திணைக்களங்கள் இன்னமும் வழங்கவில்லை. அனுமதியை சம்பந்தப்பட்ட எனவே குறித்த பகுதியில் குவிக்கப்பட்டுள்ள மண்ணை அண்மையிலுள்ள பொது அமைப்புக்களது பயன்பாட்டிற்காக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படல் வேண்டும்.

இந்திய மீனவர்களால் வலைகள் படகுகள் சேதமாக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படல் வேண்டும்.

கனமழை வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட விவசாய அழிவுகளுக்கு நிவாரணம் வழங்கப்படல் வேண்டும்.


யாழ் குடாநாட்டில் சொந்தக் காணிகள் மற்றும் வீடுகள் இல்லாதவர்களுக்கு வழங்கவும் வீடுகள் கட்டிக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி போதாமலுள்ள நிலையில் நிதியை அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு இருவது கோரிக்கைகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு பாராளுமன்ற உறுப்பினர் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு செயலாளரான மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ளார்.



# வேலையற்ற பட்டதாரிகளும் கூலி வேலைக்கு ஆளில்லாத சமூகமும்



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

அண்மையில் பட்டதாரிகள் வேலை கேட்டு ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள். அந்த ஊர்வலத்தில் முன்னணியில் அவர்கள் தெருக் கூட்டுவது, சுமை வண்டியை இழுப்பது போன்ற வேலைகளை ஒரு நாடகமாகச் செய்து கொண்டு போனார்கள்.படித்துப் பட்டம் பெற்ற பின்னரும் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்ற ஒரு செய்தியை வெளியே கொண்டு வருவதே அவர்களுடைய நோக்கம்.

ஆனால் அது அவர்களையே திருப்பித் தாக்கி விட்டது. கூலி வேலை, தெருக் கூட்டுவது, சுமை தூக்குவது போன்றவை இழிவானவைகளா? படித்தவர்கள் செய்யக் கூடாதா? என்று கேள்வி கேட்டு முகநூலில் உலாவிகள் கடுமையாக விமர்சித்திருந்தார்கள்.

நாட்டில் சுமாராக நாலாயிரத்துக்கும் குறையாத வேலையில்லாத பட்டதாரிகள் உண்டு. எனது நண்பர் ஒருவர் அவர்களை "அரச வேலையற்ற பட்டதாரிகள்" என்று அழைப்பார். ஏனென்றால் அவர்கள் அரச வேலைக்காகத்தான் போராடுகிறார்கள். தனியார் துறையில் வேலை செய்வதற்கோ அல்லது தாமாக ஒரு தொழில்துறையை தொடங்குவதற்கோ தயாரில்லை என்றும் அவர் கூறுவார்.

அவர்கள் ஏன் அரச வேலையை நாடுகிறார்கள் என்று கேட்டால், அதற்கும் அவர் பதில் சொல்வார். ஏனென்றால் அது சுகமானது. கஷ்டப்படத் தேவையில்லை. தடை தாண்டல் பரீட்சைகளின்மூலம் பதவி உயர்வுகளைப் பெறலாம். கஷ்டப்பட்டு வேலை செய்து பதவி உயர்வுகளைப் பெற வேண்டிய தேவை இல்லை. பணி நேரத்தில் ஓய்வாக இருக்கலாம். ஓய்வூதியம் கிடைக்கும். அரசு ஊழியர் என்ற சலுகைகள் கிடைக்கும். எனவே ஒப்பீட்டளவில் ரிஸ்க் இல்லாத, கஷ்டப்படுத்த தேவையில்லாத, பாதுகாப்பான பிற்காலத்தைக் கொண்ட ஒரு தொழில், என்பதனால் பெரும்பாலானவர்கள் அரச ஊழியத்தை நாடுகிறார்கள் என்று எனது நண்பர் சொல்வார்.

ஆனால் அரசு ஊழியத்தின் தொடக்க காலம் அப்படியொன்றும் செழிப்பானதோ மகிழ்வானதோ அல்ல. யாழ்ப்பாணத்தில் ஓர் அரசு ஊழியருக்கு முதலில் கிடைக்கும் நியமனம் பெரும்பாலும் தூரப் பிரதேசங்களுக்கே கிடைக்கும். தூர மாவட்டங்களுக்குத்தான் கிடைக்கும். கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் அங்கே அவர் சேவை புரிய வேண்டும். அரசியல் செல்வாக்கு இருந்தால் தீவுப் பகுதிக்கோ அல்லது பளைப் பிரதேசத்துக்கோ நியமனத்தை எடுக்கலாம். ஆனால் அது எல்லாருக்கும் கிடைப்பதில்லை. இவ்வாறு 8 ஆண்டுகள் கட்டாயமாக கஷ்டப் பிரதேசத்தில் வேலை செய்ய வேண்டி வரும் பொழுது, அது முதல் நியமன அனுபவத்தை துன்பகரமானதாக மாற்றுவதுண்டு.

தூர மாவட்டத்தில் அங்குள்ள அரச ஊழியருக்கான விடுதியில் தங்கினால் அது வேறு விடயம். அதல்லாமல் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து வேலைக்குப் போய் மாலையில் வருவது என்று சொன்னால் அது மிகத் துன்பம். வேலை வெறுக்கும் அளவுக்குத் துன்பம். அதிகாலையில் எழ வேண்டும். எழுந்தால்தான் அரச ஊழியர்களுக்கான பஸ்ஸைப் பிடிக்கலாம். வேலை முடிந்து வீடு திரும்பும்போது கிட்டத்தட்ட நான்கு மணிக்கு மேல் ஆகிவிடும். அது நியமனம் கிடைத்த இடத்தின் தூரத்தைப் பொறுத்த விடயம்.

இவ்வாறு நியமனம் கிடைத்த அதே காலப்பகுதியில்தான் பெரும்பாலும் திருமணமும் நடக்கும். திருமணம் செய்த நபரும் முதல் நியமனம் பெறும் அரசு ஊழியர் என்றால் தேனிலவுக் காலம் பயணத்திலேயே கழியும். காலையில் எழுந்து பரக்கப் பரக்க ஓட வேண்டும். காலையில் எழுவதற்காக இரவு முன்கூட்டியே நித்திரைக்குப் போக வேண்டும். புதுமணத் தம்பதிகள் உல்லாசமாக திரிவதற்கு கிடைக்கும் நேரம் மிகச் சில மணித்தியாலங்கள்தான். அதற்குள் பிள்ளையைப் பெற்றால் அது அடுத்த துன்பம். பிள்ளையைப் பராமரிக்க அம்மம்மா, அப்பம்மா யாராவது இல்லையென்றால், அதற்கு வேலைக்கு ஆள் தேட வேண்டும். அநேகமாக ஆட்கள் கிடையாது. வேலை நேரத்தில் பிள்ளையின் முகம் அல்லது துணையின் முகம் கண்ணுக்கு முன் வரும். அது வேலை செய்ய விடாது. இப்படித்தான் 8 ஆண்டுகளும் கழியும்.

பொதுவாக திருமணத்தை உடனடுத்து வரும் காலப் பகுதியானது வாழ்வில் மகிழ்ச்சியாக, ஃப்ரீயாகக் கழிக்க வேண்டிய ஒரு காலம். ஆனால் முதல் நியமனம் பெறும் நகரப் பகுதி அரசு ஊழியர்களுக்கு அதுதான் துன்பகரமான, வெறுப்பான ஒரு காலமாகவும் அமைவதுண்டு. குடும்பத்தைப் பிரிந்து பயணம் செய்து கொண்டே இருக்க வேண்டும். எந்தக் காலகட்டத்தில் வாழ்க்கையை மகிழ்ச்சியாகக் கழிக்க வேண்டுமோ அதே காலகட்டம் பயணத்தில் கழிந்து போகும். அந்த அரசு ஊழியர் மகிழ்ச்சியான அரசு ஊழியராகவும் இருக்கப் போவதில்லை; மகிழ்ச்சியான குடும்பத் தலைவராகவோ தலைவியாகவோ இருக்க போவதும் இல்லை.

படிப்பு எதற்கு? பட்டம் எதற்கு? தொழில் எதற்கு? மகிழ்ச்சியாக இருப்பதற்குத்தானே? ஒரு தம்பதி மகிழ்ச்சியாக உல்லாசமாக கழிக்க வேண்டிய காலத்தில் பெரும் பகுதியை பயணத்தில் கழிப்பது என்பது வாழ்க்கையின் பொருளை, கல்வியின் பொருளை கேள்விக்கு உள்ளாக்கும்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து முதல் நியமனம் பெறும் பெரும்பாலான அரசு ஊழியர்களின் வாழ்க்கை அப்படித்தான் இருக்கிறது. அந்த எட்டு ஆண்டுகளையும் பல்லைக் கடித்துக்கொண்டு கடந்து விட்டால் அதன் பின் ரிலாக்ஸாக இருக்கலாம் என்று பலரும் கருதுகிறார்கள்.

இவ்வாறாக அரச ஊழியத்துக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகளின் தொகை ஆயிரக்கணக்கில் வந்துவிட்டது. கடந்த சில ஆண்டுகளாக அவர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். ஆனால் யாரும் அவர்களைக் கண்டு கொள்வதில்லை. குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் புதிய நியமனங்கள் ஒத்திவைக்கப்பட்டு கொண்டே போகின்றன.

இது ஒரு காட்சி. இதற்கு நேர் எதிரான மற்றொரு காட்சி உண்டு. நாலாயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகள் வேலை கேட்டு போராடும் ஒரு நாட்டில் கூலி வேலைக்கு ஆட்கள் இல்லை.

நான் வாழும் கிராமத்தில் படித்தவர்கள், பெரிய உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உண்டு. ஆனால் இங்கு கூலி வேலைக்கு ஆள் கிடையாது. முன்பு ஒரு முதியவர் இருந்தார். அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர். ஒரு கோவில் தாழ்வாரத்தில் உறங்குவார். அவரை வேலைக்கு பிடிப்பதே கஸ்ரம். வேலைக்கு வந்தாலும் அவருக்கு விருப்பமான நேரம்தான் வருவார். விரும்பின வேலையைத்தான் செய்வார். அதிகம் சாப்பிட மாட்டார். அவரும் ஒரு கடுமையான மழை நாளில், கோவில் தாழ்வாரத்தில் இறந்து விட்டார். இப்பொழுது வேலைக்கு ஆட்கள் இல்லை. கூலி வேலைக்கும் துப்புரவு வேலைகளுக்கும் தேங்காய் பிடுங்குவதற்கும் ஆட்கள் இல்லை. தேங்காய் பிடுங்குவதற்கு முன்பு கேட்கப்பட்ட கூலி சில தேங்காய்கள். இப்பொழுது ஒரு மரத்துக்கு 300 ரூபாய். அது பரவாயில்லை. ஏனென்றால் ஒரு பெரிய தேங்காய் 200 ரூபாய்க்கு மேல் போகிறது.

ஒருபுறம் ஆயிரக்கணக்கான பட்டப்பட்டதாரிகள் வேலை கேட்டுப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு புறம், கூலி வேலைகளுக்கு, சாதாரண சிறிய வேலைகளுக்கு ஆட்கள் இல்லை. முதியவர்களைப் பராமரிக்க, இயலாதவர்களைப் பராமரிக்க, சமைக்க, வீட்டு வேலைகளைச் செய்ய, பிள்ளை பெற்ற பெண்ணைப் பராமரிக்க, ஆட்கள் இல்லை.

இதற்கு அரசாங்கம் மட்டும் பொறுப்பல்ல. தொழில் தொடர்பாக, தொழில் ஸ்தலத்தில் மகிழ்ச்சியாக இருப்பது தொடர்பாக, தொழில் பாதுகாப்பு தொடர்பாக, தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் அளவுகோள்களும் நம்பிக்கைகளும்கூட இதற்குக் காரணம்தான்.

அவ்வாறு அரசு ஊழியத்துக்காக காத்திருக்கும் பட்டதாரிகளைத் தயார் படுத்திய கல்வி முறையும் பல்கலைக்கழகங்களும் காரணம்தான். அரச தொழில்துறைக்கு வெளியே தாமே சுயமாக தொழில் துறைகளை தொடங்கத் தேவையான தொழில் முனைவோர்களை நமது கல்விமுறை உற்பத்தி செய்ய தவறிவிட்டதா?

ஒருபுறம் சாதி சார்ந்த தொழில் பிரிவுகள். இன்னொரு புறம் தொழில் முனைவோரை உருவாக்காத கல்வி. யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளில் மீனவ சமூகங்கள் மத்தியில் இருந்து வரும் பட்டதாரிகள் கடற் தொழிலை திரும்பிப் பார்ப்பதில்லை. அதுபோல வலிகாமத்தின் மையப் பகுதிகளில் விவசாயக் குடும்பங்களில் இருந்து வந்த பட்டதாரிகள் விவசாயத்தைத் திரும்பிப் பார்ப்பதில்லை. ஆனால் வன்னியில் பெரும்பாலான பட்டதாரிகள் விவசாயத்தை ஒரு உப தொழிலாக மேற்கொள்வார்கள்.

முதலீட்டுத் துறையைச் சேர்ந்த ஒரு விற்பனர் ஒருமுறை என்னிடம் கேட்டார், ஒரு வாகனம் திருத்துபவரின் மகன் முகாமைத்துவப் பட்டதாரியாக வந்தபின் தன்னுடைய தகப்பனின் சிறிய வாகனம் திருத்தும் கடையை பெரிய அளவில் விஸ்தரித்து முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சிப்பதில்லை. அவர் தன் தகப்பனின் தொழிலைத் திரும்பிப் பார்க்காத ஒரு நிலைமைதான் உண்டு.

ஒருபுறம் சாதி ஏற்றத்தாழ்வுகள் காரணமாக ஒரு புதிய தலைமுறை தமது பரம்பரை தொழிலை கைவிடுகின்றது. அதில் ஒரு நியாயம் உண்டு. அதே சமயம் அந்த தொழில்களை நவீனமாக்கி எந்திரமயப்படுத்துவதன் மூலம் அவற்றின் சாதி அடையாளங்களை அகற்றலாம். ஆனால் கல்வி முறை அதற்கு வேண்டிய தொழில் தரிசனங்களைக் கொடுக்கவில்லை.

புலம்பெயர்ந்த தமிழர்கள் அனுப்பும் காசும் இந்த விடயத்தில் இளையவர்களைக் கெடுக்கிறது என்று ஒரு மதகுரு சொன்னார். ஆனால் 2009 க்கு உடனடுத்த ஆண்டுகளில் அவ்வாறு உதவிய பலரும் இப்பொழுது உதவுவதில்லை. அதேசமயம் புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலரின் நிதி உதவிகளை வைத்துத் தொழில் முனைவோராக மேலெழுந்த பலர் உண்டு. இங்கு பிரச்சனை என்னவென்றால், இவை எவையும் ஒரு மையத்தில் இருந்த திட்டமிடப்படாத உதிரிச் செயற்பாடுகளே.


இப்பொழுது மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதில் படித்தவர்கள், பட்டதாரிகள், நல்ல தொழில் பார்த்தவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒரு பகுதியினர் திரும்பி வருகிறார்கள் என்பதும் உண்மை. ஆனால் வெளியேறத் துடிக்கும் அனைவரும் வாழ்க்கை இங்கு கடினமானது, மகிழ்ச்சியற்றது என்று கருதுகிறார்கள் என்பது மட்டும் உண்மை. அல்லது புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வாழ்க்கை ஒப்பீட்டளவில் வசதியானது, பாதுகாப்பானது என்று நம்புகிறார்கள் என்பது மட்டும் உண்மை.

தமிழ்த் தேசியவாத கட்சிகளிடம் இது தொடர்பான பொருத்தமான பொருளாதாரத் தரிசனங்கள் இல்லை. அவர்களுக்கு தேசியவாத அரசியல் என்றாலே என்ன என்று தெரியவில்லை. ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்களில் ஒன்று பொதுப் பொருளாதாரம் ஆகும். ஆனால் தமிழ்க் கட்சிகளில் யாரிடமாவது பொருத்தமான பொருளாதாரத் தரிசனங்கள் உண்டா? இல்லை. ஒருபுறம் நிதிப்பலம் மிக்க புலம் பெயர்ந்த சமூகம் பிரிவேக்கத்தோடு உதவத் தயாராக இருக்கிறது. இன்னொருபுறம், வேலை கேட்டுப் போராடும் பட்டதாரிகள். இன்னொரு புறம் கூலி வேலைக்கு ஆள் இல்லாமல், முதியோரை, இயலாதவர்களைப் பராமரிப்பதற்கு ஆள் இல்லாமல், சமைப்பதற்கு ஆள் இல்லாமல் தவிக்கும் நடுத்தர வர்க்கக் குடும்பங்கள். இதுதான் 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஈழத் தமிழ் சமூகத்தின் சமூகப் பொருளாதார அரசியல் நிலவரம்.

# கிராமத்து வதனம் அமைப்பால் ஆசிரியை கமலவதனா சுந்தாவின் தலைமையில் கொண்டாடப்பெற்ற 'தமிழ் மரபுத்திங்கள் மற்றும் பொங்கல் விழா'

**- குரு அரவிந்தன்**

**செ**ன்ற ஞாயிற்றுக்கிழமை 26-1-2025 கனடா கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பால் அல்பியன் வீதியில் உள்ள 925, திஸ்டில் நகர மண்டபத்தில் ஆசிரியர் திருமதி கமலவதனா சுந்தாவின் தலைமையில் தமிழ் மரபுத்திங்கள் மற்றும் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக வீடு விற்பனை முகவர் வாருணன் ஸ்ரீகுமரகுரு கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் நடந்த கண்காட்சியில் தமிழ் வளர்த்த பெரியோர் மற்றும் தமிழ் மன்னர்களின் படங்களும், தமிழ் மரபு சார்ந்த காட்சிப்படங்களும் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.







நிர்வாகசபை அங்கத்தவர்களால் மங்களவிளக்கு ஏற்றப்பட்ட பின் தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா தேசியப்பண் ஆகியன பைரவி அருள் மாறன், லதிசா தயாளன், பிரகதி சர்மா ஆகிய சிறுமிகளால் இசைக்கப் பெற்றன. இதைத் தொடர்ந்து புஸ்பா சிவராசா, இந்திராணி சங்கநிதி ஆகியோரின் தமிழரின் பாரம்பரிய பறை இசையும், சிலம்பாட்டமும் இடம் பெற்றன. அடுத்து வரவேற்பு நடனமும், திருமதி. அருள்மலர் மதியழகனின் வரவேற்பு உரையும் இடம் பெற்றன.

அடுத்து இளையதலைமுறைக்கும் பெண்களுக்குமான "வதனம்" சஞ்சிகையின் முதலாவது ஆண்டுமலர் வெளியீட்டுரையை எழுத்தாளரும் முதன்மை ஆசிரியருமான குரு அரவிந்தன் நிகழ்தி வைக்க, இளைய தலைமுறை இணையாசிரியர் ஆகாஸ் ஞானவேலு அவர்களால் வெளியிட்டு வைக்கப்பெற்றது. திருமதி. கேதா கிருபராஜனின் இதழ் ஆய்வுரையைத் தொடர்ந்து, முதல் பிரதியை பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து கிராமிய நடனமும், இளைய தலைமுறையினரின் கும்மி நடனமும், பண்டாரவன்னியன் நாடகமும் இடம் பெற்றன. தொடர்ந்து பொங்கல் பாடல், முக்கனிகள் பற்றிய பாடல், ஆதித்தமிழரின் அறிவியல், திருக்குறள் கூறும் அறிவியல், அறிவுக்கூர்மை, தற்பாதுகாப்புக் கலையான கராட்டி போன்ற சிறுவர் நிகழ்வுகளும் இடம் பெற்றன. காப்பாளர் திரு. நவாகருணரட்ணராசா அவர்களின் சிறப்புரையைத் தொடர்ந்து செயலாளர் திருமதி. யோகநாயகி நித்தியானந்தமூர்த்தியின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே முடிவுற்றது. நவகீதா முருகண்டி நிகழ்ச்சிளைத் தொகுத்து வழங்கினார்.





கனடாவில் பல அமைப்புக்களால் மரபுத்திங்கள் விழா கொண்டாடப் பட்டாலும், இரண்டு விதமான தமிழ் மரபுத் திங்கள் விழா கொண்டாடப் படுவதைப் பொதுமக்களால் அவதானிக்க முடிகின்றது. ஒன்று சில அமைப்புகள் தங்கள் அங்கத்தவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, தமிழ் வளர்க்கும் நோக்கத்துடனான நிகழ்ச்சிகளுடன், தங்கள் பணத்தில் கொண்டாடுவது. மற்றது மாகாண அரசின் நிதி உதவி பெற்று நிதி வசதிக்கு ஏற்ப நிகழ்ச்சிக் குழுக்களுக்குப் பணம் கொடுத்து பிரமாண்டமாகக் கொண்டாடுவது. அரசியல் பிரமுகர்கள் மேடையை ஆக்கிரமித்து இருப்பதில் இருந்து எப்படியான மரபுத் திங்கள் விழா நடக்கிறது என்பதை இலகுவில் புரிந்து கொள்வது மட்டுமல்ல, தமிழ் வளர்ப்பதில் யார் ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதையும் இத்தகைய நிகழ்வுகளில் பொதுமக்களால் அவதானிக்கவும் முடிகிறது.


மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்
தைப்பூச திருநாள் சிறப்பாக நடைபெறவுள்ளது



06-02-2025 வியாழக்கிழமை தொடக்கம் 7ம் 8ம் திகதி
மாலை 6:00 மணிக்கு இருமுடி மாலை அணியும் சக்திகள்
மாலை அணிந்து ஐந்து நாட்கள் பூசைகள் நடைபெறும்.

9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையும். 10-02-2025
திங்கட்கிழமை காலை தைப்பூசத்துடன் முடிவடையும்.
காலை 8:00 மணி தொடக்கம் சிறப்பு பூசைகள் நடைபெற்று,
மகேஸ்வர பூசையும் நடைபெறும்.
11-02-2025 செவ்வாய்கிழமை காலை
பருவ பூசை சிறப்பாக நடைபெறும்.

அன்னையின் அருள் வேண்டி சிறப்புடன் வாழ அனைத்து
சக்திகளையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அத்துடன் நீங்கள் விரும்பிய வேப்பிலை, பழம், பூ என்பன
கொடுத்துதவலாம்.

செடி வளர முதலில் விதை வேண்டும், அந்த விதையை ஊன்ற
மனம் வேண்டும். அந்த விதையை ஆழமாக ஊன்ற வேண்டும்.
அது நன்கு வளரவதற்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். எந்த
அளவிற்கு ஆழமான ஈடபாடு இருக்கின்றதோ.
அந்த அளவிற்குத் தக்கபடி பயன் கிடைக்கும்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647

# Tamil MP's Privileges Were Breached; Government Seeks Report from Immigration Department

**- Siva Parameswaran**

The NPP government led by President AKD has sought a report from the Immigration and Emigration officials at the Kattunayaka International Airport, Colombo regarding the brief unfair detention of the Tamil MP Sivagnanam Shiritharan.

He was en route to Chennai at the invitation of the Tamil Nadu Government to participate in the Diaspora Tamil meeting organized by the state.

While calling for a report from the airport officials, the government also expressed regret over the incident and the behavior of the immigration officials.

The issue also echoed in the Parliament. When MP Shiritharan raised a point of order stating his Parliamentary privilege had been breached, the Leader of the house and minister Bimal Ratnayake apart from stating the action taken by the government also assured the MP his privilege would be protected.

Sivagnanam Shiritharan elected on behalf of the Ilankai Tamil Arasu Katchi, from the Jaffna electoral district was on his way to Chennai to participate in the said conference but was stopped at the Kattunayaka airport by the immigration officials.

Speaking in Parliament on the 21st of January, MP Shiritharan said Counter Terrorism Investigation Department (CTID) officers told him they needed to interrogate him and verify his passport.

"The airport officials told me there are issues in my passport and I need to be interrogated by the CTID and other investigation units. Also, I was informed there is a travel ban against me. At this point, my colleague MP Hon. Rauf Hakeem who was also at the airport and proceeding for the same conference, intervened. After a lengthy interrogation, I was allowed to board the aircraft at the last moment, when it was ready for departure".

Shiritharan says when he returned from India and inquired with the immigration officials regarding any travel ban against him, the officials confirmed no such ban had been imposed on him. However, he told Parliament his privileges as an MP had been breached.

"However, when I returned on the 13th of January, 2025, I checked with the officials if any travel ban had been imposed on me and I was told no such ban existed. In the absence of any travel ban and without any court ruling or any advice from you Hon. Speaker, the Immigration and Emigration officials said there is a travel ban against me. I feel, that being said so by the airport official breaches by Parliamentary privileges. Now, I raise in it in the Parliament to know the background of such an interrogation, which breaches my privilege".



Sri Lanka Muslim Congress leader and opposition MP representing the Samagi Jana Balavegya Rauf Hakeem also confirmed the hindrance created to the ITAK MP Shiritharan at the airport.

"This happened at a time when we were about to pass through the special entrance for the MPs at the terminal. When the Immigration and Emigration officials told him there was a travel ban against him. I spoke to them. If there is a travel ban against a person there should be a case in that regard".

The SLMC leader raised a further question in parliament regarding this incident. He questioned the stand of the NPP government which came to power promising to abolish the Prevention of Terrorism Act and still continue to patronize it.

"Not only that, even now your government is implementing that Act. According to the PTA Act, the CTID cannot arbitrarily function like this. But, when such questions are asked, nothing about any court order is mentioned. Hence, this is not only the breach of parliamentary privilege of a MO, but also a big injustice meted out to him. Even though we came to a decision after discussion, I request due investigation should be ordered into this".

Responding to this, the Leader of the House and minister Bimal Ratnayake said that PTA has to be used very carefully.

"To speak about the Prevention of Terrorism Act, It's neither our principle nor policy. However, till new laws are framed, we have to deal with the existing laws in the country very carefully, because we have run the government till the draft legislation is approved".

Bimial Rathnayake added a report has been called for from the deputy Defence Minister and other officials regarding detaining MP Sivagnanam Shiritharan during his trip abroad.

"Although I am not in direct contact with the chairman of the Airport since this incident happened at the airport, I have asked for a report from him. I have also informed the deputy Defence Minister Major General Aruna Jayasekara to investigate this. Also since the issue is related to immigration, we expect you could refer this issue to Immigration and hand over to us the letter you received from the Privileges Committee, through the Minister."

The Leader of the House also expressed regret on behalf of the government that a representative of the Tamils was detained at the airport by the immigration and also emphasized such a ban did not happen under the guidance of the government.

"Hence, we regret the inconvenience caused to the Hon. MP Shiritharan. However, it is not clear if this was due to the use of the PTA. He has also not said so. Also, he was not subjected to such an issue when he returned. So, this is definitely not the policy of the government or did not happen under the guidance of the government".

He also assured that as the Leader of the House, he shall strive to protect the privileges of the MPs, whatever the issue may be.

# தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ் மக்களின் உயர்வுக்காக அர்ப்பணித்த ஒரு மாபெரும் தலைவரை, ஈழத் தமிழ் இனம் இழந்து தவிக்கிறது.

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், மாவை சேனாதிராஜா அவர்களின் மறைவு குறித்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தி

தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ் மக்களின் உயர்வுக்காக அர்ப்பணித்த ஒரு மாபெரும் தலைவரை, ஈழத் தமிழ் இனம் இழந்து தவிக்கிறது.

மாவை என்னும் மாபெரும் சரித்திரம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் அரசியல் வரலாற்றில் மாபெரும் ஆளுமையாக திகழ்ந்தார். அன்னாரின் தமிழ் இனப் பற்று, மொழிப் பற்று, தேசப் பற்று என்றும் போற்றுதலுக்கு உரியவை.

இவ்வாறு திடீரென மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். மாவை சேனாதிராஜா அவர்களின் மறைவு குறித்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத் தலைவர் கனடா வாழ் நடா ராஜ்குமார் அவர்கள் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேற்படி அனுாபச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, "தன் வாழ் நாள் முழுமைக்கும் தமிழ் மக்களின் உயர்வுக்காக உழைத்த ஒரு மாபெரும் மனிதரை, இன்று ஈழத் தமிழ் இனம் இழந்து நிற்கிறது. அன்னாரின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

சோமசுந்தரம் சேனாதிராஜா என்ற இயற் பெயர் கொண்ட இவர், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மாவிட்டபுரம் என்ற புகழ் பெற்ற ஊரில் 1942 அக்டோபர் 27 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை தனது ஊருக்கு அருகில் உள்ள வீமன்காமம் மகா வித்தியாலயத்திலும், தனது உயர் கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியிலும் கற்றார். பின்னர், இலங்கைப் பல்கலைக் கழக வெளிவாரி மாணவராக இணைந்து இளங்கலை பட்டம் பெற்றார்.



இலங்கைத் தமிழ் தேசிய இயக்கம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி, தமிழர் விடுதலைக் கூட்டணி என பல மட்டங்களிலும், பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் பிரதான உறுப்பினராகவும் தொடர்ந்தார் 2014 ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து பாரிய சவால்களை எதிர் கொண்டு வெற்றிப் பாதையில் பயணித்தார்.

எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் உலகளாவிய மாநாடுகளில் பிரதம பேச்சாளராக இலங்கை, இந்தியா, ஜெர்மனி, தென் ஆப்பிரிக்கா என பல நாடுகளிலும். தொடர்ந்து உலகத் தமிழ் இனத்துக்கான இவரின் சேவையைப் பாராட்டி, 2017 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற 13 ஆவது உலக மாநாட்டைத் தொடர்ந்து, இவரின் 75 ஆவது ஆண்டு பவழ விழாவை எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் அங்கு கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவு எம்மை நிலை குலைய வைத்துள்ளது, அன்னாரது ஆன்மா சேர பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

முனைவர், திரு. நடா ராஜ்குமார்
அகிலத் தலைவர்
உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்
அகிலத் தலைமைச் செயலகம்
கனடா


மீண்டும் தேர்வு செய்யுங்கள்
விஜய் தணிகாசலம்
ஸ்காபரோ றூஜ் பார்க் MPP வேட்பாளர்
RE-ELECT
FEB
27
2025
ONTARIO PC
விஜயின் அணியில் இணைந்து ஆதரிக்க அழையுங்கள்
vijaythani.ca
info@vijaythani.ca
416-354-6320
221 Morrish Rd
Authorized by the CFO for the Vijay Thanigasalam Campaign


Hindu Parliament & Sanatana Hindu Sangha
Presents
KUMBH MELA
NORTH AMERICA 2025
MAHASHIVARATRI
SNAN
TUESDAY,
FEB 25th
KAILASA
TORONTO
1960 Ellesmere Rd Unit 10,
Scarborough, ON
GRAND AMRIT SNAN
SUNDAY FEB 2nd
KAILASA USA
9720 Central Ave, Montclair, CA
Other Snan Dates
Jan 28th
Feb 11th
Learn More:
Organized with Hindu Temples across North America
Email: contact@nithyananda.ca
Call: (416) 439-2089

AQUA WELLNESS CENTRE LIMITED
REHABILITATION CLINIC

INJURED?

CALL US TODAY
OVER 15 YEARS OF EXPERIENCE
IN PERSONAL INJURY.

- EXTENDED HEALTH CARE ( DIRECT BILLING )

WSIB
SLIP & FALL
PRIVATE CLIENTS
SPORTS INJURY
MOTOR VEHICLE ACCIDENT

KENEDY AND SHEPPARD AVE. E
OFF KENNEDY ROAD.





AQUA WELLNESS CENTRE LTD.
100 COWDRAY COURT SUIT 140
TORONTO, ON. M1S 5C8

T: 416-463-9090 C: 647-972-7126
F: 416-363-9090

# PRESS RELEASE
# ஊடக வெளியீடு

**January 24, 2025**
**ஜனவரி 24, 2025**

Local champion Thadsha Navaneethan nominated as the Ontario NDP candidate for Scarborough North.
ஸ்காபுரோ வடக்கு தொகுதியில் ஒன்ராறியோ மாகாண புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக உள்ளூர் வெற்றியாளர் தட்ஷா நவநீதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

SCARBOROUGH - Community champion and nonprofit leader Thadsha Navaneethan will be the Ontario NDP candidate for Scarborough North in the upcoming provincial election.
ஸ்காபுரோ - எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஸ்காபரோ வடக்கு தொகுக்கான ஒன்றாறியோ மாகாண புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக சமூக பாதுகாவலரும் இலாப நோக்கற்ற தலைவருமான தட்ஷா நவநீதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.







"Scarborough became my home when my family arrived in Canada as refugees when I was 10. Growing up in community housing, I experienced firsthand the challenges and barriers my parents faced, particularly while working in precarious, unsafe, and low-wage jobs," said Navaneethan.
"எனக்கு 10 வயதாக இருந்தபோது எனது குடும்பம் அகதிகளாக கனடாவுக்கு வந்தபோது ஸ்காபுரோ எனது வீடாக மாறியது. சமூக வீட்டுத் திட்டத்தில் வளர்ந்த நான், ஆபத்தான, பாதுகாப்பற்ற மற்றும் குறைவூதிய தாழில்களில் வேலை செய்யும்போது, எனது பெற்றார் எதிர்கொண்ட சவால்களையும் தடைகளையும் நேரடியாக அனுபவித்தேன்" என நவநீதன் தெரிவித்தார்.

"Now, raising a family of my own in Scarborough, I know the challenges that our community faces. With Marit Stiles and the Ontario NDP, I know that we can stand up for better health care, education, housing, and a more affordable life. It's time to build a better and brighter future for our community!"
"இப்போது, ஸ்காபுரோவில் எனது சொந்த குடும்பத்தேடு வளர்த்துவரும் நான், எங்கள் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை அறிவேன். மாரிட்ஸ்டைல்ஸ் மற்றும் ஒன்டாரியோ என்.டி.பி. உடன், சிறந்த சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, வீட்டு வசதி திட்டம் மற்றும் மிகவும் கட்டுப்படியாகும் வாழ்க்கைக்கு நாம் குரல் கொடுக்க முடியும் என்பதை நான் அறிவேன்!"

Thadsha has dedicated her career to making life better for people. She has served as a program coordinator for after school programs in Scarborough, and later as a diversity trainer and leader for non-profits such as the Canadian Cancer Society. Her most recent experience is as a Human Rights Officer for OPSEU/SEFPO.
மக்களுக்கு சிறந்த வாழ்க்கையை உருவாக்க தட்ஷா தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார். ஸ்காபுரோவில் பாடசாலை நேரத்திற்கு பின்னர் நடைபெறும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான திட்ட ஒருங்கிணைப்பாளராக அவர் பணியாற்றியுள்ளார். பின்னர் கனடிய புற்றுநோய் சங்கம் போன்ற இலாப நோக்கற்ற நிறுவனங்களின் பன்முகத்தன்மை பயிற்சியாளராகவும், தலைவராகவும் இருந்தார். அவரது மிக சமீபத்திய அனுபவம் OPSEU/SEFPO இன் மனித உரிமைகள் அதிகாரியாக கடமையாற்றியதாகும்.

"I am excited to have Thadsha as our candidate in Scarborough North," Ontario NDP Leader Marit Stiles said. "Thadsha has an impressive track record of standing up for her community to amplify their voices and deliver results. I know she will be a fantastic MPP for Scarborough North and a strong voice for Scarborough at Queen's Park. Together, we can turn the page on Doug Ford and elect a government that's on your side."
"ஸ்காபுரோ வடக்கில் தாட்ஷாவை எங்கள் வேட்பாளராக பெற்றதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என ஒன்ராறியா என்.டி.பி. தலைவர் மாரிட் ஸ்டைல்ஸ் கூறினார். "தட்ஷா தனது சமூகத்தின் குரலாக ஒலித்து தகுந்த முடிவுகளை வழங்குவதில் தன்னிகரற்ற சாதனை திறனைக் கொண்டுள்ளார். அவர் ஸ்காபுரோ வடக்கிற்கான ஒரு சிறந்த மாகாணசபை உறுப்பினராகவும், சட்டமன்றத்தில் ஸ்காபுரோவுக்கு வலுவான குரலாகவும் இருப்பார் என்பதை நான் அறிவேன். நாம் ஒன்றிணைந்து, டக் போர்ட் இடமிருந்து மாறாக, உங்கள் பக்கம் இருக்கும் ஒரு அரசாங்கத்தை தேர்ந்தெடுக்க முடியும்."

**Quick Facts:**
**விரைவு தரவுகள்:**

When Thadsha was 10, she and her family arrived in Scarborough as refugees fleeing the genocide in Sri Lanka.
தட்ஷாவுக்கு 10 வயதாக இருந்தபோது, அவரும் அவரது குடும்பத்தினரும் இலங்கை இனப்படுகொலையிலிருந்து தப்பி அகதிகளாக ஸ்காபுரோவுக்கு வந்தனர்.

Her career in the non-profit sector includes time managing the Malvern Family Resource Centre, and leading diversity and equity initiatives at the Canadian Cancer Society, Evergreen Hospice, and the Jane & Finch Community Centre, receiving awards and recognition for her work to advance equity.
இலாப நோக்கற்ற துறையில் அவரது வாழ்க்கையில் மால்வர்ன் குடும்ப வள மையத்தை நிர்வகிப்பது, கனடிய புற்றுநோய் சங்கம், Evergreen நல்வாழ்வு மற்றும் ஜேன் & ஃபின்ச் சமூக மையத்தில் முன்னணி பன்முகத்தன்மை மற்றும் சமத்துவ முயற்சிகள் ஆகியவை அடங்கும்.

Thadsha speaks English and Tamil. She and her partner Neethan are raising their two young sons in Scarborough.
தட்ஷாஆங்கிலம் மற்றும் தமிழ் பேசும் திறமை கொண்டவர். அவரும் அவரது துணைவர் நீதனும் ஸ்காபுரோவில் தங்கள் இரண்டு இளம் மகன்களையும் வளர்த்து வருகின்றனர்.

**MEDIA CONTACT / ஊடக தொடர்பு:**
media@ontariondp.ca

# எமது தெய்வத்தின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
14 - 06 - 1943



இறப்பு:
29 - 01 - 2024

## திரு. சண்முகம் தியாகராஜா

(யாழ்ப்பாணம், வேலணை, கரம்பன், கனடா)

குடும்பத்தின் ஒளிவிளக்காய்,
இன்பம், துன்பம் எது வந்தெதிர் கொண்டாலும்
வாழ்ந்து காட்டி எங்கள் வாழ்விற்கு அடித்தளம் அமைத்த
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆண்டு ஒன்று ஆனதுவே அப்பா
பாசத்தால் எம்மையெல்லாம் சுற்றி வைத்து அணைத்து பாதுகார்த்தீர்கள்
ஓர் உறவுப்பாலமாக இருந்து வழிகாட்டினீர்களே
இன்ற நாங்கள் எம் உள்ளங்களை உலுப்பிக்கொண்டு இருப்பதை அறிவீர்களா
நினைவுகளின் மத்தியில் உங்கள் உருவத்தை தெடுகின்றோம்
எம்முன் வர மறுத்தாலும் கனவில் வந்து காட்சியளிப்பதை
கண்டு புன்னகை புரிய வைக்கின்றது
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம் மனதை விட்டகலா அன்புள்ளத்தை
ஒளி தந்த ஆலயத்தை ஒளி தந்து எங்களை காக்குமாறு வேண்டுகின்றோம்
என்றும் உங்கள் ஆத்மா சிநத்தியடைய பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

என்றும் உங்கள் ஆத்மா சிநத்தியடைய பிரார்த்திக்கும்
அன்பு மனைவி. பிள்ளைகள். மருமக்கள். பேரப்பிள்ளைகள்.




# அநுர அரசின் ஆட்டம் ஆரம்பம்

***“முன்னாள் ஜனாதிபதிகள் அரச சொகுசு மாளிகையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற அநுரகுமார அரசின் அறிவிப்பால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு “செக்”வைக்கப்பட்டது. இந்நிலையில் அதிரடியாக பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சரான அநுர பிரியதர்சன யாப்பாவை அவரது மனைவியுடன் கைது செய்த அநுரகுமார அரசு மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வரும் முன்னாள் கடற்படை அதிகாரியுமான யோஷித்த ராஜபக்சவை அதிரடியாகக் கைது செய்ததுடன் அடுத்ததாக நாமல் ராஜபக்சவையும் இலக்கு வைத்துள்ளமை ராஜபக்ச குடும்பத்தையும் பொதுஜன பெரமுனவினரையும் ஆட்டம் காண வைத்துள்ளது.”***

**------------------------------------------------------------ - கே. பாலா ----**

நாட்டைபொறுப்பேற்று 100 நாட்கள் கடந்து விட்ட நிலையில் இன்னும் ஆரம்பமாகவில்லையே என்று இத்தனை நாட்களும் நாட்டு மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த, விசனப்பட்டுக் கொண்டிருந்த “ஆட்டம்” ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் முழுநாடும் மக்களும் பரபரப்புடனும் “அடுத்தது யார்” என்ற எதிர்வு கூறல்களுடனும் ஆட்டத்தை ரசிக்க ஆரம்பித்துள்ளதுடன் இலங்கையின் அரசியல் களமும் சூடுபிடிக்கத்தொடங்கியுள்ளது.

நாம் ஆட்சிக்கு வந்தால் ஊழல், மோசடி செய்த, குற்றங்கள் புரிந்த அரசியல் வாதிகள் எத்தரத்தில் இருந்தாலும் சிறை செல்வார்கள் என்ற உறுதிமொழியை வழங்கியிருந்த அநுர குமாரதிசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆணை வழங்கியிருந்தபோதும் இத்தனை நாட்களும் இவ்விடயத்தில் அடக்கி வாசித்து வந்த அநுரகுமார அரசு தற்போது “கைது வேட்டை” ஆட்டத்தை ஆரம்பித்துள்ளமையே மக்களை குஷிப்படுத்தியுள்ளதுடன் குற்றங்கள், ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட முன்னாள் அரசியல்வாதிகளை கதிகலங்க வைத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள் அரச மாளிகைகளிலிருந்து வெளியேற வேண்டும் என்ற அறிவிப்புடன் ராஜபக்சக்களை இலக்கு வைத்து அநுர குமார அரசு தொடங்கிய ஆட்டத்தில் மஹிந்த ராஜபக்ச ஆட்டமிழக்கும் நிலையில் உள்ள சூழலில் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் முன்னாள் ஆட்சியாளர்களான பொதுஜன பெரமுனவினர் இலக்கு வைக்கப்பட்டு முன்னாள் அமைச்சர்களுடன் மஹிந்த ராஜபக்சவின் புதல்வர்களும் சிக்கியுள்ளதுடன் அடுத்துவரும் நாட்களில் இன்னும் பல பிரபல அரசியல்வாதிகளும் அநுரகுமார அரசின் ஆட்டத்தில் சிக்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அநுரகுமார அரசின் முதல் கைது வேட்டையில் பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சரும் ராஜபக்சக்களின் தீவிர விசுவாசியுமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சிக்கினார். ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க பதவியேற்ற நிலையில், வடிவமைக்கப்பட்ட அதிசொகுசு காரை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக வாக்குமூலம் வழங்க ஜோன்ஸ்டன் பெர்னான்டோ கடந்த வருட இறுதியில் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சென்றிருந்தார்.

இந்நிலையில், ஹில்டன் ஹோட்டலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட சொகுசு கார் தொடர்பான விசாரணைகளுக்கு அமைவாகவும், சதொச ஊழியர் குழுவை கடமையிலிருந்து நீக்கி, வேறு பணிகளில் ஈடுபடுத்திய வழக்கில் நீதிமன்றில் ஆஜராகாத குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தாலும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் வெளியில் வந்தார்.

இந்தக் கைதின் பின்னர் மக்கள் எதிர்பார்த்திருந்த அளவுக்கு எந்த வித அரசியல் கைதுகளும் இடம்பெறவில்லை. இதனால் மக்கள் அநுரகுமார அரசு மீது சற்று வெறுப்படைந்து விமர்சிக்கத் தொடங்கினர். இவ்வாறான நிலையில் முன்னாள் ஜனாதிபதிகள் அரச சொகுசு மாளிகையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற அநுரகுமார அரசின் அறிவிப்பால் முன்னாள் மஹிந்த ராஜபக்சவுக்கு “செக்” வைக்கப்பட்டது. இது ராஜபக்சக்களிடையில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதுடன் பொதுஜன பெரமுனவினரை கொதிப்படையவும் வைத்தது.

முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கொழும்பு - 05 பகுதியில் வீடு ஒன்று ஒதுக்கப்பட்டது. இந்த வீட்டின் நடைமுறை சந்தை பெறுமதி 2598.5 மில்லியன் ரூபா, நடைமுறை மாத வாடகை கட்டணம் 12,75000 ரூபா இந்த வீட்டில் இருந்து கோத்தபாய ராஜபக்ஷ வெளியேறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கொழும்பு - 07 பெஜ்ஜட் பகுதியில் வழங்கப்பட்டிருந்த வீடு 3132 மில்லியன் ரூபா பெறுமதியானது. இதன் நடைமுறை சந்தை மாத வாடகை கட்டணம் 29 இலட்சம் ரூபா. இந்த வீட்டில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவும் வெளியேறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியாரான ஹேமா பிரேமதாச கொழும்பு - 07 இல் உள்ள அரசாங்கத்துக்கு சொந்தமான வீட்டில் வசித்தார். தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு - 07 பகுதியில் 1005.5 மில்லியன் ரூபா பெறுமதியான வீடு வழங்கப்பட்டது. இவர் இன்றும் இந்த வீட்டில் தான் வசிக்கிறார். அந்த வீட்டின் நடைமுறை சந்தை மாத வாடகை 9 இலட்சம் ரூபா. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் பௌத்தாலோக்க மாவத்தை வீடு 1 ஏக்கர் 13.8 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 3128 மில்லியன் ரூபா பெறுமதியானது. 46 இலட்சம் ரூபா மாத வாடகை பெறுமதியானது. எனவே இவர்கள் இந்த வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என அநுரகுமார அரசு அறிவித்ததே ராஜபக்சக்களை கொந்தளிக்க வைத்தது. இதற்கெதிராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நீதிமன்றத்தை நாடியுள்ளதுடன் அரசு தனக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தால் சொகுசு மாளிகையிலிருந்து வெளியேறத் தயார் எனவும் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் அடுத்த அதிரடியாக பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சரான அநுர பிரியதர்சன யாப்பாவை அவரது மனைவியுடன் கடந்த 22 ஆம் திகதி அநுரகுமார அரசு அதிரடியாகக் கைது செய்து அதிர்ச்சி கொடுத்தது. 2014 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பிங்கிரிய மற்றும் நாரம்மல பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 6,146,110 ரூபாவை பெற்று, அந்தப் பணத்தை இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது பிரசாரம் செய்தமை மூலம் அரச சொத்துகள் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டின அடிப்படையில் அநுர பிரியதர்சன யாப்பாவும் அவரது மனைவியும் கைதானார்கள். பின்னர் பிணையில் வெளியே வந்தனர்.

இவ்வாறான நிலையில்தான் மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வரும் முன்னாள் கடற்படை அதிகாரியுமான யோஷித்த ராஜபக்சவை அதிரடியாகக் கைது செய்து ராஜபக்ச குடும்பத்தையும் பொதுஜன பெரமுனவினரையும் ஆட்டம்காண வைத்துள்ளது அநுரகுமார அரசு. இரத்மலானை, சிறிமல் பிரதேசத்தில் அமைந்துள்ள 34 மில்லியன் ரூபா மதிப்புள்ள வீடு மற்றும் காணியை வாங்கியது தொடர்பாக இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் பணமோசடி சட்டத்தின் கீழ் யோஷித்த ராஜபக்ச கைது செய்யப்பட்டு தற்போது அவரும் பிணையில் வெளியில் வந்துள்ளார்.

அடுத்துவரும் நாட்களில் மஹிந்த ராஜபக்சவின் மூத்த புதல்வரும் முன்னாள் அமைச்சரும் தற்போதைய பொதுஜன பெரமுன எம்.பி.யுமான நாமல் ராஜபக்ச கைது செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் எழுந்துள்ளன. இதனை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நாமல் ராஜபக்சவை கைது செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான சட்டத்தரணி மனோஜ் கமகேயும் தெரிவித்துள்ளார். இதனை உறுதிப்படுத்தும் விதமாகவே நாமல் ராஜபக்சவிற்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளார். இலங்கையில் ரக்பி அபிவிருத்திக்காக இந்திய கிரிஷ் ரியல் எஸ்டேட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 70 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் இந்த குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு முன்னாள் அரசியல்வாதிகள், பிரபலங்கள் கைது என ஆட்டத்தை அநுரகுமார அரசு ஆரம்பித்துள்ள நிலையில் இக்கைதுகள் தொடர்பாக “அரசியல் பழிவாங்கல்” என்ற வகையிலான தீவிர எதிர் பிரசாரங்களும் எதிர்கட்சிகளினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டுள்ளது. இந்த அரசாங்கம் வழக்குகளை ஜோடித்து சாட்சியங்களை உருவாக்கி பழிவாங்க முயற்சிக்கின்றது. யாரை கைது செய்ய வேண்டும் என்பது குறித்து இரவு கலந்துரையாடி கைது செய்யும் நிலை காணப்படுகின்றது. பாராளுமன்றத்தில் நாம் மக்களுக்காக குரல் கொடுத்து விமர்சனங்களை வெளியிடும் நிலையில் எமது குடும்ப உறுப்பினர்களை அரசாங்கம் பழிவாங்குகின்றது. எனது சகோதரர் யோஷிதவை கைது செய்வதற்கு பெலியத்த வரையிலும் பல வாகனங்களுடன் விரட்டிச் சென்று கைது செய்தமை அநாவசியமான விடயம். வாக்குமூலம் ஒன்றை அளிப்பதற்கு வருமாறு அழைத்திருந்தால் தாமாகவே முன்வந்து வாக்குமூலம் அளித்திருப்பார். இதற்கு எரிபொருள் செலவிட்டு வாகனங்களில் பெலியத்த வரைச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என நாமல் ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை இந்த அரசியல் கைதுகளின் பின்னணியில் நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் எதிர்ப்பு குழுவின் செயலாளராக பதவி வகித்த தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இருப்பதாகவும் தற்போதைய கைதுகள் சட்டத்தின் பிரகாரம் இடம்பெறவில்லை என்றும் முன்னாள் அமைச்சரும் பிவிதுரு ஹெலஉறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் எதிர்ப்பு பிரிவில் முக்கிய பதவி வகித்தவரே தற்பொழுது பொலிஸ் திணைக்களத்துக்கு பொறுப்பான அமைச்சராக இருக்கின்றார். அவர் தனது அரசியல் பழிவாங்கல்களை தொடர்கின்றார் என நாமல் ராஜபக்சவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரித்துள்ளது அநுரகுமார அரசு. அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்ச கைது செய்யப்பட்டதில், ஜனாதிபதி அநுரகுமார விற்கு எவ்வித தொடர்பும் கிடையாது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். யோஷித ராஜபக்ச கைது செய்யப்பட்டமை அநுர அரசின் திட்டமிட்ட பழிவாங்கல் என ராஜபக்சக்களுக்கு ஆதரவான மற்றும் ராஜபக்ச குடும்பத்தினர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். எவ்வாறாயினும், யோஷித ராஜபக்சவின் கைதில் ஜனாதிபதி அநுரகுமார விற்கோ அல்லது அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கோ எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**(தொடர்ச்சி *18* பக்கம்)**

# உலகெங்கும் வாழ் சைவப் பெருமக்களுக்கு "முருகன் குடிகொண்ட கதிர்காமப் பதி" என அறியப்பெற்ற வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயத்தில் முதற்தடவையாக பிரதிஷ்டை செய்யப்படவுள்ள வள்ளியம்மை – தெய்வயானையம்மை சமேத முருகப் பெருமான் விக்கிரங்கள்



*திரு. சுகுமார் கணேசன்*







கனடா வாழ் "இந்து மதக்காவலர்" தொழிலதிபர், மற்றும் தமிழ்ச் சமூகத் தலைவர் சுகுமார் கணேசன் அவர்களின் உயரிய உபயமாக இந்த திருப்பணி மிகுந்த பொருட்செலவில் நிஜமாகியுள்ளது

---

இலங்கையில் முருகன் வீற்றிருக்கும் திருத்தலம் என்றவுடன் முதலில் எமது மனக்கண்ணின் முன்னால் தோன்றுவது கந்தனின் கதிர்காமம் என்னும் புனிதத் தலமே ஆகும்.

தென்னிலங்கையில் மாணிக்க கங்கைக் கரையில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் கதிர்காமக் கந்தனை, சைவர்கள் சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலம் தொடக்கம் எமது அடியார்கள் வழிபட்டு வந்திருக்கிறார்கள். பக்தர்களால் பெருநம்பிக்கையுடன் வழிபடப்படும் கதிர்காம முருகப் பெருமான் மீது, காலத்துக்கு காலம் பாடப்பட்ட தோத்திரப் பாடல்கள் எண்ணில் அடங்காதவை. தென்னிலங்கையிலே வீற்றிருந்து அருள் பாலிக்கும் குமரக்கடவுளான கதிர்காமக் கந்தனை தரிசித்து அருள் பெறும் பொருட்டு, இந்தியாவில் இருந்தும், வட இலங்கை மற்றும் இலங்கையின் ஏனைய பாகங்களில் இருந்தும் கதிர்காமத்திற்கு பாத யாத்திரை செல்வது வழி வழியாக வந்த மரபு ஆகும்.

அவ்வாறான முருகன் குடிகொண்டதாக வணங்கப்பெற்று வந்த வரலாற்றுப் புகழ் மிக்க ஆலயத்தில் விக்கிரங்கள் எதுவும் இல்லாமல் வழிபாடுகளும் பூஜைகளும் இத்தனை நூற்றாண்டுகளாக இடம்பெற்றுள்ளன என்பதை எம்மால நம்ப முடியுமா? புராதன காலம் தொட்டு நம்பிக்கையோடும் பக்தியோடும் வழிபடப்படும் கதிர்காமத்தின் தலப் பெருமையையும், கந்தன் அருளாட்சியையும், சமயக் கிரியைகளையும், வழிபாட்டு முறைகளையும், உயர்ந்த வாழ்வியலையும் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்வது காலத்தின் கட்டாயம் ஆகும். இதன் காரணமாக வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமம் பெரிய ஆலயத்தில் பிரதி'டை செய்யும் பொருட்டு கதிர்காமக் கந்தனுக்கும் வள்ளியம்மைக்கும் தெய்வயானையம்மைக்கும் திருவுருவச்சிலை திருப்பணி தென்னிந்தியாவில் நிறைவேற்றப்பட்டு, இலங்கைக்கு முருகப் பெருமான் இருபெரும் சக்திகளுடன் தற்பொழுது எழுந்தருளியுள்ளார்.

கதிர்காமம் ஆலயம் தோன்றிய வரலாற்றை நாம் ஆராயும் போது. பல கதைகள் எமக்கு கூறப்பட்டுள்ளன.

இவ்வளவு சிறப்புக்கள் கொண்ட பழனி மலை நவபாஷாண தண்டாயுதபாணி சிலையை போகர் சித்தர் ஸ்தாபிக்கும்போது, இடுப்புப் பகுதிக்கு மேல் பகுதி நிறைவு பெறவில்லை என இந்தியாவில் திருப்பணி செய்வித்து, தற்போது இலங்கையில் எழுந்தருளிய வள்ளியம்மை - தெய்வயானையம்மை சமேத கதிர்காமக் கந்தன் திருவுருவச் சிலைகளுக்கு சிறப்புப் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு வரும் மணி சிவராம கிரு'ண ஐயர் மகேஸ்வரக் குருக்கள் குறிப்பிடுகிறார். அதனால் கவலையுற்ற போகர் சித்தர் தனது குல தெய்வமான தொட்டச்சி அம்மனை நினைந்துருகி வழிபட்டு, அம்மன் ஆணைப்படி இலங்கைக்கு வருகைதந்து கதிர்காமத்தில் தவத்தை மேற்கொண்டு, அருள் பெற்று, மீண்டும் பழனி மலை சென்று நவபா'ாண தண்டாயுதபாணி சிலையை முழுமையாக ஸ்தாபித்தார் என்றும் மேற்படி வரலாற்றுக்குறிப்புக்களில் தெரிவிக்கப்படுகின்றன.

போகர் சித்தர் பழனியில் சமாதி அடைவதற்கு முன்னர், அவர் கதிர்காமத்துக்குச் சென்று 1,008 தாமரை இதழ் வடிவம் கொண்ட இயந்திர தலம் அமைத்தார் எனக் கூறப்படுகின்றது.

அத்தடன். முருக வழிபாட்டுக்கு உரிய ஆலயங்களுக்குள் மூர்த்தி, தலம் மற்றும் தீர்த்தம் மூன்றும் பெருமை பெற்று தென்னிலங்கையில் உள்ள கதிர்காமம் திகழ்கின்றது. கதிர்காமம் என்ற சொல் வருவதற்கான காரணம் ஆய்வாளர்களால் பலவாறு கூறப்படுகிறது. "கதிரகாமம்" என்னும் சொல் "கார்த்தியேக கிராம" என்பதன் மருஉருவெனவும், யானைவாழ் கிராமம் என்று பொருள்படும் "கஜரகம" என்பதன் சிதைவென்றும், கதிர்காமம் என்பது, கடவுள் தன்மையுடைய ஒளியும் அன்பும் கலந்த இடம் எனவும், ஆறு தீப்பொறிகளால் பிறந்த ஆறுமுகன், வள்ளி அம்மை மேல் காதல் கொண்டு மணம் புரிந்த இடமென்றும் சிலர் பொருள் கொள்வர்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற கதிர்காமத்தில் முருகப் பெருமானுக்கு திருக்கல்யாணம் கடந்த 92 வருடங்களாக நடைபெறாத காரணத்தால், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் துன்பங்கள் பல ஏற்படுவதாக சிவராம கிரு'ண ஐயர் மகேஸ்வரக் குருக்கள் அவர்கள் ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

இந்தக் தெய்வக் குற்றங்களை நீக்கும் வகையில் முன்னாள் வட மாகாண ஆளுனர் திரு. ஜீவன் தியாகராஜா அவர்களின் எண்ணக் கருவுக்கு முருகன் அருளாலும், ஆசியாலும், முருக பக்தர்கள் பலரின் ஒன்றிணைந்தார்கள். அவர்களில் ஒருவராக கனடா வாழ் "இந்து மதக்காவலர்,, தொழிலதிபர் , மற்றும் தமிழ்ச் சமூகத் தலைவர் சுகுமார் கணேசன் அவர்களும் இணைந்து தனது உயரிய உபயமாக இந்த திருப்பணிக்கு மிகுந்த நிதியை டாலர்களாக அள்ளிக் கொடுத்து அந்தப் பொருட்செலவில் மூன்று அழகியதும் தெய்வீகம் நிறைந்தவையுமான விக்கிரகங்கள் அமைந்து குழுவினரின் கனவு நிஜமாகியுள்ளது.

அவர்கள் கடந்த 2023 ஆம் ஆண்டு கதிர்காமத்தில் கந்தச'டி காலத்தில் திருக்கல்யாணம் நடாத்துவதற்கும் முயற்சித்தார்கள்.

ஆயினும் கதிர்காமம் பெரிய கோயிலில் விக்கிரகங்கள் எதுவும் இல்லாத காரணத்தாலும், தெய்வயானை அம்மன் கோயிலில் 5 - 6 அங்குல விக்கிரங்கள் மாத்திரம் இருந்த காரணத்தாலும், செய்வதறியாது அவர்கள் திகைத்தார்கள். முருகப் பெருமானின் திருவிளையாடல் ஆரம்பமானது. கந்தச'டி காலத்தில் கதிர்காமத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்த, வத்தளையைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பக்தர் ஒருவர், அவ்வருடம் ஆலயத்திற்கு வரும்போது 2 1/2 அடி உயரம் கொண்ட முருகன், வள்ளியம்மை, தெய்வயானையம்மை திருவுருவச் சிலைகளை ஆலயத்திற்கு திருப்பணியாக வழங்கினார். ஆகவே முருகன் அருளால் அவ்வருடம் தெய்வயானையம்மை ஆலயத்தில் திருக்கல்யாணம் சிறப்பாக இடம்பெற்றது.

முன்னாள் வட மாகாண ஆளுனர் திரு. ஜீவன் தியாகராஜா அவர்களுடன், மணி சிவராம கிரு'ண ஐயர் மகேஸ்வரக் குருக்கள், திரு. வியாசா கல்யாணசுந்தரம், திரு. மகரகாந்தன், திரு. அருண், திருமதி. உமா உள்ளடங்கலான பக்தர்கள் பலர் முருகன் அருளால் ஒன்றிணைந்தார்கள். அதன் பலனாக முருகப் பெருமானுக்கு கடந்த 2024 ஆம் ஆண்டும் இரண்டாவது முறையாகவும் தெய்வயானையம்மன் ஆலயத்தில் திருக்கல்யாணம் வெகு சிறப்பாக இடம்பெற்றது. ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திர தினத்தில் கதிர்காமம் பெரிய ஆலயத்தில் முருகப் பெருமானுக்கு அபிடேகம் மற்றும் யாக பூசை செய்விக்க விரும்பிய திரு. ஜீவன் தியாகராஜா அவர்கள், தேவையான அனுமதியை கதிர்காம தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே தி'ான் குணசேகர நிலமே அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

"முருகு என்னும் சொல்லுக்கு "அழகு" என்பது பொருள் ஆகும். ஆகவே அழகன் முருகனுக்கும் அவனோடு உடன் உறைகின்ற இரு பெரும் சக்திகளான வள்ளியம்மை - தெய்வயானையம்மை ஆகியோருக்கும் திருவுருவச் சிலைகளை வடிப்பது என்பது அத்தனை இலகுவான காரியம் அல்ல. பழனி சித்தர் உத்தரவுக்கு அமைவாக, சுவாமிமலை திருத்தலத்துடன் தொடர்புபட்ட தலைசிறந்த ஸ்தபதிகள் திருவுருவச் சிலைகளை வடித்தார்கள். சைவத்தொண்டு ஆற்றுவதிலும் தமிழ்த்தொண்டு ஆற்றுவதிலும் பெரு விருப்பம் கொண்ட கனடா நாட்டின்பிரபல வர்த்தகர் திரு. கணேசன் சுகுமார் அவர்கள், தனது சர்வதேச வர்த்தகப் பங்காளரான . மகாதேவன் அவர்களோடு இணைந்து, வள்ளியம்மை - தெய்வயானையம்மை சமேத கதிர்காமக் கந்தன் திருவுருவச் சிலைகளை இந்தியாவில் வடித்து , முன்னாள் வட மாகாண ஆளுனர் திரு. ஜீவன் தியாகராஜா அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைவாக இலங்கைக்குத் தருவிப்பதற்கான திருப்பணியை முழுமையாக நிறைவேற்றினார். கனடாவின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பு வழங்கிவருவதுடன், முருகன் மீது தீராத பக்தியும் அன்பும் கொண்ட கணேசன் சுகுமார் அவர்களின் முழுமையான திருப்பணியின் பலனாக, இந்தியாவில் திருப்பணி செய்யப்பட்ட திருவுருவச் சிலைகளுக்கு, காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ விஜேந்திர சங்கராச்சார்ய சுவாமி, வடக்கன்பட்டி சுவாமி, புலிப்பாணி சித்தர் முதலிய சமயப் பெரியார்களும் அந்தணப் பெருமக்களும் முழுமையான பூஜை வழிபாடுகள் இயற்றியதுடன், முருகப் பெருமான் இரு பெரும் சக்திகளுடன் கண் திறந்து அருள் பாலித்தார்.

இறுதியில் இவ்வாண்டு 2025. ஜனவரி மாதம்19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை முருகப் பெருமானுக்கு பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது. தொடர்ந்து காலை 11 மணிக்கு சென்னை விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் ஊடாக கடல் தாண்டி எடுத்து வரப்பெற்ற முருகப் பெருமான் கட்டுநாயக்க விமான நிலையத்தில் எழுந்தருளினார். கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த திருவுருவச் சிலைகளுக்கு, ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் சுங்கத் திணைக்களத்தில் சிறப்பு பூஜை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவற்றுக்கு அங்குள்ள அரச அதிகாரிகள் தங்கள் பூரண ஆதரவை வழங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை சென்றடைந்த வள்ளியம்மை - தெய்வயானையம்மை சமேத கதிர்காமக் கந்தன் திருவுருவச் சிலைகளுக்கு, ஏற்கனவே இந்தியாவில் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் இலங்கை சுங்கத்துறையினர் துரிதமாக செயற்பட்டு, பரீட்சித்து, தேவையான அனுமதிகளை வழங்கினார்கள். அத்துடன் வள்ளியம்மை - தெய்வயானையம்மை சமேத கதிர்காமக் கந்தன் திருவுருவச் சிலைகளுக்கு பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கான அனுமதிகளையும் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. வள்ளி - தெய்வயானை உடனுறை முருகப்பெருமானுக்கு, முன்னாள் வட மாகாண ஆளுனர் திரு. ஜீவன் தியாகராஜா தலைமையிலான குழுவினர் சென்று பூஜை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

கொழும்பில் இருந்து 19ம் திகதி ஞாயிறு இரவு 11 மணிக்குப் புறப்பட்டு, 20ம் திகதி திங்கட்கிழமை காலை மூளாய் முருகன் ஆலயத்தில் எழுந்தருளிய வள்ளியம்மை - தெய்வயானையம்மை சமேத கதிர்காமக் கந்தனுக்கு பிராயச்சித்த பூஜை இடம்பெற்றது. தொடர்ந்து அன்றைய தினம் மதிய வேளையில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, ஆலயத் திருப்பணி இடம்பெற்று வரும் வரலாற்று சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் எழுந்தருளிய கதிர்காமக் கந்தனை வட மாகாண பக்தர்கள் தரிசித்து அருள் பெற்று வருகிறார்கள்.

எதிர்வரும் நாட்களில் செல்வச்சந்நிதி, உகந்தை, மொனராகலை ஊடாக வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமம் பெரிய ஆலயத்தில் எழுந்தருளவுள்ள கதிர்காமக் கந்தனுக்கும் வள்ளியம்மைக்கும் தெய்வயானையம்மைக்கும் நித்திய - நைமித்திய பூஜைகள் இடம்பெறவுள்ளன. இதன்மூலம் .இலங்கை வரலாற்றில் முதல்முறையாக கதிர்காம கந்தன் ஆலயத்தில் திருமுருகனுக்கு விக்கிரக வழிபாடு நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்போது காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கந்தசுவாமி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பெற்று தினமும் விசேட அபிசேகங்கள் இந்த மூன்று விக்கிரகங்களுக்கும் நடைபெறுகின்றன. இன்னும் சில நாட்களில் நல்லூர் கந்தன் ஆலயம், செல்வச்சந்நிதிமுருகன் ஆலயம் , உகந்தை முருகன் ஆலயம் அகியவற்றுக்கு எடுத்துச் செல்லப்பெற்று , மொனராகலை ஊடாக கதிர்காமத்திற்கு முருகப் பெருமானை திருவுலாவாக அழைத்துச் செல்லும் பொருட்டு ஏற்பாட்டுக் குழுவினர் ஆயத்தங்களை முன்னெடுத்துள்ளனர். இந்தத் திருப்பணியை பூரணமாக நிறைவேற்ற முன்னாள் வட மாகாண ஆளுனர் திரு. ஜீவன் தியாகராஜா மற்றும் உயரிய உபயகாரர் கனடா வாழ் கணேசன் சுகுமார் உட்பட திருப்பணிக் குழுவினர் அயராது பணியாற்றி வருகின்றனர்.

---

பிற்குறிப்பு:-இந்தியா தமிழகத்தில் தந்தைக்கு ஓம் எனும் பிரணவ மந்திரத்தை உபதேசித்த சுவாமிமலையில் சிறந்த சிற்பாசாரியாரினால் முறைப்படி வார்ப்பு செய்யப்பட்டு சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டு பழனி ஸ்ரீதண்டாயுதபாணி திருக்கோவிலில் வி'ேட வழிபாடுகள் நடைபெற்று, தமிழகத்தின் பல ஆலயங்களிலும், ஈழத்திலும் முருகன் ஆலயங்களிலும் விசேட பூஜைகள் , விழாக்கள்,பிரார்த்தனைகள் நடைபெற்று ஈழத்தின் திருப்புகழ் பாடப்பெற்ற முருகனின் கதிர்காமத்தில் ஸ்தாபிற்பதற்காக வள்ளி தேவசேனா சமேத சுப்ரமணிய சுவாமிக்கு இலங்கையில் பலபாகங்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. விரைவில் கதிர்காம கந்தன் ஆலயத்தில் முருகப்பெருமான் பிரதிஷடை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது

இலங்கை செய்திகள் Sri Lanka News

# 15,000 தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டத்தை மட்டக்களப்பில் இலங்கையின் அபிவிருத்தி அமைச்சர் ஆரம்பித்துவைத்தார்!

கனகராசா சரவணன்





நாட்டின் வளர்ச்சிக்காக சிறந்த தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நாட்டில் 15,000 தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பிரதேச அபிவிருத்தி வங்கி ஊடாக கடன் வழங்கும் திட்டம் அரசாங்கத்தின் தேசிய திட்டத்தின் கிழக்கு மாகாணத்தில் 100 சுயதொழில் முயற்சியாளருக்கு கடன் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பில் 30ம் திகதி அன்று வியாழக்கிழமை அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி ஆரம்பித்து வைத்தார்.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் லசந்த பர்னான்டோ தலைமைய-ில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன், விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் என்,தனஞ்சயன், மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் சதா சுபாகரன் கலந்து கொண்டனர்.

இதன் போது தங்கள் மீது நம்பிக்கை கொண்ட சிறந்த தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் முதற்கட்டமாக அம்பாறை மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களைச் சோந்த தெரிவு செய்யப்பட்ட 100 தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் தொகைக்கான காசோலைகள் அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளி-னால் பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டது.



இதன் போது தேசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிக-ளினால் அமைச்சர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# Navy Shooting in Sri Lanka Waters Create Tensions in In-do-Lanka Relations

**- Siva Parameswaran**

The Indian government has lodged a strong protest with Sri Lanka over an incident of the Sri Lankan Navy opening fire on Indian fishermen in the early hours of Tuesday the 28th of January'25.

The Sri Lankan Navy opened fire at the Indian fishermen who trespassed into their territorial waters off the coast of Valvettithurai.

Two fishermen from the city of Karaikkal administered by the Union Territory of Pondicherry were injured in the shooting by the Sri Lankan Navy. According to the fishermen in Karaikkal, one of their fisher folk suffered a fracture below the knee while the other sustained an injury below his ankle.

After the firing incident, the two injured Indian fishermen were admitted to the Jaffna Teaching Hospital, and their condition is said to be stable. The Indian Consul General in Jaffna, Sai Murali, visited them at the hospital.

Following this, the Sri Lankan envoy in Delhi was summoned by the Indian External Affairs ministry and a protest was lodged.

"The Sri Lankan Acting High Commissioner in New Delhi was called in today morning to the Ministry of External Affairs and a strong protest was lodged over the incident. Our High Commission in Colombo has also raised the matter with the Ministry of Foreign Affairs of the Sri Lankan government".

According to the media release by the Indian External Affairs Ministry among the 13 fishermen on board the fishing vessel, two have sustained serious injuries.

While the Indian government and fishermen in Karaikkal say their fishermen sustained serious injuries, the Sri Lankan Navy says slight injuries were caused to the Indian fishermen.

The boat has been seized by the Sri Lankan Navy.

"The government of India has always emphasized the need to treat issues pertaining to fishermen in a humane and humanitarian manner, keeping in mind livelihood concerns. The use of force is not acceptable under any circumstances whatsoever. Existing understandings between the two Governments in this regard must be strictly observed".

The date and place of the shooting incident also vary in the statements of the two governments.

The Indian Government's media release said the incident of firing by the Sri Lankan Navy was in the proximity of Delft Island in the early hours of the morning (28). But the Sri Lankan Navy says the Indian fishing boats were poaching in the Sri Lankan waters off Valvettithurai, Jaffna in the dark hours of 27 Jan 25.

Indian fishermen's continued trespassing into the Sri Lankan territorial waters and poaching the aquatic resources was a prominent issue discussed by the Indian PM and the Sri Lankan President during his recent visit to New Delhi, the first overseas visit after being elected the President of the island nation.

During the meeting between Indian PM Narendra Modi and Sri Lankan President Anura Kumara Dissanayake in Delhi, the leaders said the fishermen issue was an important issue.

"We discussed the fishermen issue is to be dealt with in a humanitarian way", Indian PM told in a joint media meeting with the visiting Sri Lankan President.

President Dissanayake in his post on social media platform X said their discussion included "stopping illegal fishing". In his speech along with the Indian PM, he expressed his concern over the ecological damage in the Palk Strait due to illegal fishing methods.

The fishermen from the Northern Province strongly criticized the Indian PM's comment that the fishermen's issue is to be dealt with in a humanitarian way.

"The demand from the Indian PM looks like telling Sri Lanka to stop arresting Indian fishermen seizing their boats and releasing those arrested and their boats. The Indian PM is very clearly saying to allow their fishermen to fish in our waters. It's ridiculous to hear such a stand" Mohammed Alam, secretary of the Northern Province Fishermen's Federation said at that time.

Despite the leaders meeting and discussing the fishermen issue, the incursion of the Indian fishermen into the Sri Lankan waters continues unabated.

In the present incident> the Sri Lankan Navy says the Indian fishing boat continued to maneuver aggressively, without complying with their lawful orders and its duty, during the process of taking the boat into custody.

"On this occasion, the Indian fishermen have acted aggressively, maneuvering their fishing boat in a hostile manner and behaving confrontationally with the Navy. However, while boarding the fishing boat, in accordance with the authority vested in the Navy, the Indian fishermen, as an organized group, have attempted to assault naval personnel and made an attempt to snatch a firearm from a naval officer, endangering the lives of the naval personnel. In the process, an accidental fire has taken place, causing slight injuries to two Indian fishermen".

# சுருவில்– மக்கள் ஒன்றியம்– கனடா நடத்திய வருடாந்த நத்தார் தினக் கொண்டாட்டம்





கனடாவில் நீண்ட காலமாக இயங்கிய வண்ணம், தமது பிறந்த பதியிற்கான நற்பணிகளை ஆற்றுவதற்கு கருவி-யாக விளங்கும் "சுருவில்-மக்கள் ஒன்றியம்- கனடா" நடத்திய வருடாந்த நத்தார் தினக் கொண்டாட்டம் 18-01-2025 சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் உள்ள "கென்னடி கொன்வென்சன் சென்றர்" மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தற்போதைய நிர்வாகச் சபைத் தலைவர் ஜெயச்செல்வன் பற்குணசிங்கம் அவர்கள் தலைமையில் விழாக்குழுவினர் தங்கள் பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

மேற்படி சுருவில் பதியில் பிறந்தவர்கள் மற்றும் புகுந்தவர்களாக ஆண்களையும் பெண்களையும் கரம் பிடித்தவர்கள் என பல குடும்பங்கள் கலந்து கொண்டன.

சுருவில் கிராமத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாக திருவாளர்கள் திரு-வருள் கிருஸ்ணபிள்ளை உட்பட சிலர் அங்கு வாழ்த்துரைகள் வழங்கினார்கள். கலை நிகழ்ச்சிகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் அனைத்தும் இடம்பெற்றன. பிறந்த பதியின் நினைவுகளோடு அனைவரும் கொண்டாட்டம் நிறைவுற்ற பின்னர் இல்லம் ஏகினர்

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
**1131**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையாஉ கோவில் தெல்லிப்பளை

*“ பிடியதனுருகுமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்*
*கடிகண பதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை இறையே ”*

மருதமர வேர்க்குமிழில் தான்தோன்றியாகத் தோன்றிய விநாயகப் பெருமானின் ஆலயம், அன்பர்களின் தொண்டினாலும், பக்தியாலும் படிமுறை வளர்ச்சியைக் கண்டது. வர்த்தலைவிளானைப் பிறப்பிடமாகக்கொண்டு மலாயா சென்று பின், வேர்க்குமிழ் விநாயகனுக்குப் பணிசெய்யும் நோக்குடன் நாடு திரும்பிய முருகேசு பொன்னம்பலம் அவர்கள், தினமும் மருதடி விநாயகனுடைய எழுந்தருளித் திருக்கோலத்தினையும், அவர் வீதிஉலா வரும்காட்சியையும் மனக்கண்ணில் எண்ணி மகிழ்ந்தவாறிருந்தார்.

அவர் எண்ணம் விரைவில் நிறைவேற மருதமரத்தடியானுடைய அருள் முருகேசு பொன்னம்பலம் அவர்களுக்குக் கிடைத்தது. 1929 ஆம் ஆண்டு வேர்க்குமிழில் குடியிருந்த விநாயகனுக்கு எழுந்தருளிப் பிள்ளையார் செய்வித்ததோடு, அதற்கு அழகொளிரத் தங்கக்குடையும், கிரீடமும் செய்தளித்தார். அத்தோடு விநாயக விரதங்களுள் முக்கியவிரதமாகக் கருதப்படும் விநாயகசதுர்த்தி விரதமும் இதே ஆண்டு ஆவணிமாதத்தில் இக்கோவிலில் ஆரம்பிக்கப்பெற்றது. இதன்பின்னர் இவ்வாலயத்திலே ஆவணிச்சதுர்த்தித் திருநாள் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது.

கந்தர் என்னும் அன்பர் தமக்கு ஏற்பட்ட இன்னல்களை ஆனைமுகன் அருளால் விலக்கி, அர்த்தமண்டபத்தைக் கட்டி முடித்தார். இத்தனை சிறப்புக்களோடு அமைந்த கோவிலுக்கு மகாமண்டபமொன்றையும் கட்டவேண்டுமென முருகேசு பொன்னம்பலம் அவர்கள் மனம் விரும்பியது. 1929 ஆம் ஆண்டு மகாமண்டபத்தையும் கட்டி முடித்தார். இம்மண்டபம் பெயருக்கேற்றமுறையில் மிகப்பெரிதாகவே அமைக்கப்பட்டது.

இவ்வாறான ஆலயஅமைப்பிற்குரிய பணிகள் இடம்பெற்றாலும் எதிர்காலத்தில் இவற்றின் பராமரிப்பு எவ்வித இடையூறும் இன்றித் தொடரவேண்டுமென்ற எண்ணம் முருகேசு பொன்னம்பலம் அவர்களுடைய மனதில் உருக்கொண்டது. இதன்விளைவாக ஆலயப்பராமரிப்பிற்கென ஒரு காணியை மருதடிப்பிள்ளையாருக்கு மானியமாக அளித்தார். இவ்வாறான பணிகளைச் செய்து திருப்திகொண்ட முருகேசு பொன்னம்பலம் அவர்கள் மீண்டும் மலாயா சென்றார்.

மலாயா சென்றபோதிலும் இவர் மனம் அமைதியின்றித் தவித்தது. மருதடியானுக்குப் பணிசெய்யும் நிலையைத் தவிர்த்து வந்துவிட்டோமே என்ற ஆதங்கம் அவர் மனதை வாட்டியது. மருதடியான் புகழ்பாடாது, அவன் தொண்டு செய்யாது மலாயா வந்தது தவறென உணர்ந்து மீண்டு, அவன் சேவடியே தஞ்சமெனச் சேவித்தார்.


*“ நீயே சரணம் நின தருளே சரணம் சரணம்*
*நாயேன் பலபிழை செய்து களைத்துனை நாடிவந்தேன்*
*வாயே திறவாத மௌனத் திருந்துன் மலரடிக்கு ”*

என மனமுருகி வருந்தினார். தஞ்சமென வருவோர்க்கு அஞ்சேல் என அபயகரம் காட்டி ஆதரிக்கும் குஞ்சரமுகத்தான், பொன்னம்பலத்தாரை மீண்டும் வர்த்தலைவிளான் வர அருள்புரிந்து, ஆதரித்து ஆறுதல் அளித்தார்.

தலம், தீர்த்தம், விருட்சம் என்பன இயற்கையாக மருதடிப்பிள்ளையாருக்கு அமைந்தது அவனின் அருளை எடுத்தியம்புவதாகவே காணப்படுகின்றது. பரப்பிரம்ம சொரூபரான ஓங்காரர், ஓங்காரவடிவான யானை முகங் கொண்ட விநாயகராக, தான்தோன்றியாக எழுந்தருளியது இச்சேத்திரத்தின் முதன்மையை உணர்த்துகின்றது. அன்பர் உள்ளம் அமைதிபெற மௌனம் நிறைந்த சூழல் முக்கியமானது. இந்நிலையை எய்த வர்த்தலைவிளான் வெளிநடுவே, மௌனம் நிலவும் நிழல்மிகுந்த பகுதியைத் தேர்ந்தெடுத்தது, இவ்வாலயச் சிறப்பை மேலும் எடுத்தியம்புகின்றது.

ஆடுகள் நீர்பருகும்பொருட்டு கம்மிக்குளத்தை நாடிவந்த இடையரால் இவ்விடத்திலே கணபதி எழுந்தருளியமை இவ்வாலயத்தின் தீர்த்தமகிமையை எடுத்துக்காட்டுகின்றது. அனைத்திற்கும் மேலாக விண்ணளாவிய பந்தலிட்டு யாவரையும் வரவேற்கத்தக்க வகையில், வர்த்தலைவிளான் ஏகாந்தவெளியில் வேர்கொண்ட மருது, விநாயகர் விரும்பிக் குடியிருக்கத்தக்க பெருவிருட்சமாக நின்றமை, இக்கோவிலின் விருட்சப்பெருமையைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறான வகையிலே மருதடிப்பிள்ளையாரின் மான்மியம் காணப்படுகின்றது.

***வளரும்...***




*(15 பக்கத் தொடர்ச்சி)*

## அநுர அரசின் ஆட்டம் ஆரம்பம்

**கே. பாலா**

அதேவேளை எந்த வித நியாயமான குற்றச்சாட்டுக்களோ ஆதாரங்களோ இல்லாமல் முன்னாள் அரசியவாதிகளை, பிரபலங்களை அநுரகுமார அரசு கைது செய்வதனால்தான் கைதான ஒரு சில நாட்களுக்குள் அவ்வாறு கைதானவர்களுக்கு நீதிமன்றங்கள் பிணை வழங்கி வருவதாகவும் எதிர்கட்சிகள் கூறிவரும் நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் விரைவில் பிணையில் அனுமதிக்கப்படுவது குறித்து யாரும் கவலைப்படத் தேவையில்லை என்று ஜனாதிபதி அநுர குமார தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைப்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல, மாறாக அவர்களை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதே நோக்கம்.குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. கைது செய்யப்பட்டவர்களுக்கு விரைவில் பிணை கிடைக்கும் என்று சிலர் கூறுகிறார்கள். அதுதான் சட்டம்.எனினும், புலனாய்வாளர்கள் விசாரணை நடத்தி, சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி விசாரணைகளைத் தொடரலாம். வழக்குத் தாக்கல் செய்வதன் மூலமே சந்தேக நபர் ஒருவரை தண்டிக்க முடியும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோஷித்த ராஜபக்சவிற்கு பிணை வழங்கப்பட்டதே தவிர வழக்கிலிருந்து விடுவிக்கப்படவில்லை என நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்காரவும் தெளிவுபடுத்தியுள்ளார். நிதிச் சலவை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் இதுவரையில் யோஷித ஓர் சந்தேக நபராக பெயரிடப்படவில்லை. யோஷித தொடர்பான சம்பவம் எட்டு ஆண்டுகளுக்கு முன்னதாக இடம்பெற்றது. மேலும், நபர் ஒருவருக்கு மேல்நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட வேண்டுமானால் அதற்கு முன்னர் சந்தேக நபர் என்ற அடிப்படையில் அவரிடம் வாக்கு மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் இந்த நபரிடம் வாக்கு மூலம் பெற்றுக் கொள்ள நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு சட்ட மா அதிபர் திணைக்களம் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. இது ஓர் சாதாரண நடைமுறை. பிணை சட்டத்தின் பிரகாரம் சந்தேக நபர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லாவிட்டால், விசாரணைகளுக்கு இடையூறு இல்லையென்றால் பிணை வழங்கப்படுவது வழமையானதாகும் எனவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது அநுரகுமார அரசு மேற்கொள்ளும் கைதுகள் .நீதிமன்றங்கள் வழங்கும் பிணைகளைப் பொறுத்தவரையில் “எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்” என்பதே மக்களின் நிலைப்பாடாகவுள்ளது.

tasty தமிழா™

தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...


பனை வெல்லம்


தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்


சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call:
416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC

# மரண அறிவித்தல்



மலர்வு: 03 - 09 - 1951

உதிர்வு: 01 - 30 - 2025

## திரு. கந்தசாமி ராமகிருஸ்ணர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ராமகிருஸ்ணர் அவர்கள் 30-01-2025 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார்,
காலஞ்சென்ற கந்தசாமி தெய்வானைபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், ஐயாத்துரை சரஸ்வதியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

கமலராணி அவர்களின் அன்பு கணவரும்,

சாரங்கன், மீரா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

சுப்பிரமணியம்(இந்தியா), காலஞ்சென்ற ருக்மணி, சத்தியபாமா(லண்டன்), சிவகுமாரன்(கனடா), காலஞ்சென்ற சிவனேஸ்வரி, விக்னேஸ்வரி(பிரான்ஸ்), சிவனேஸ்வரன்(பிரான்ஸ்), லோகேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

மகேந்திரராஜா(ராசா, கனடா), ராணி ராஜேஸ்வரி(கனடா), புஸ்பராணி(கனடா), செல்வேந்திரராஜா(Selvan Rajah, கனடா), ஸ்ரீஸ்கந்தாராஜா(Sri Rajah, கனடா), பத்மாராணி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் 02-02-2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 7:00 மணி தொடக்கம் 10:00 மணிவரை** Brampton Crematorium & Visitation Centre (30 Bramwin Ct. Brampton, ON L6T 5G2) **ல் பார்வைக்காக வைக்கப்பட்டு, மறுநாள் 02-03-2025 திங்கட்கிழமை அன்று மதியம் 12:00 மணி தொடக்கம் 3:00 மணிவரை அதே இடத்தில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.**

தொடர்புகளுக்கு:

| சிவகுமாரன் - சகோதரன் | மீரா - மகள் |
|---|---|
| +14168958946 | +14165050481 |
| சாரங்கன் - மகன் | Sri Rajah - மைத்துனர் |
| +16474493719 | +14167045806 |



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


# இவ்வார ராசிபலன்

**31-01-2025 வெள்ளி தொடக்கம் 06-02-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். வசந்தம் தேடி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். திடீர் செலவு ஏற்படும். நட்பால் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பலன் தரும். பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். பிரச்சனைகள் அகலும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளம் மகிழும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தெய்வீகப் பற்று கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**ரிஷபம்:** தாய், தந்தை உதவி உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தீர்த்த யாத்திரை உண்டு. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீர்வு தரும். வியாபாரம் சிறக்கும். பங்குச்சந்தையில் லாபம் வரும். பயணம் அனுகூலம் தரும். முயற்சிகள் பலன் தரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்துக்கள் சேரும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் மறையும். விடாமுயற்சி அவசியம். உடல் உபாதைகள் நீங்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். வேலை பளு குறையும். மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. தனவரவு பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**மிதுனம்:** நினைத்த காரியம் நிறைவேறும் வாரம். தன்னம்பிக்கை கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். தோஷங்கள் ஒதுங்கும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வீண் வம்பு உருவாகும். பழைய பாக்கி வசூலாகும். திறமைகள் வெளிப்படும். புதிய முதலீடு லாபம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். வாகனத்தால் செலவு உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. உற்சாகம் அலைமோதும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய நண்பர்களால் தகுதிகள் உயரும். பெற்றோரின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L




**கடகம்:** அதிகாரமான பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். வெற்றியை எட்டும் காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பட்டம் பதவி வந்து சேரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆதாயம் பெருகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன்தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. பருப்பு தானம் பாவம் போக்கும். தொல்லைகள் விலகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்கள் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. செயல்களில் கவனம் தேவை. பாராட்டுக்கள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,O




**சிம்மம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். உறவினரால் உதவி கிட்டும். வழக்குகள் சாதகமாகும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உறவுகளால் நன்மை உண்டு. எடுத்த முயற்சி வெற்றி பெறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். சுபிட்ஷங்கள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். வாகன மாற்றம் உண்டு. புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். கட்டிடத் தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,4,2,8
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q




**கன்னி:** மங்களச் செய்தி வரும் வாரம். நெருக்கடிகள் குறையும். பழைய பகை தீரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். கல்வியில் மேன்மை உண்டு. கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்லத்தில் அமைதி பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதற்றம் குறையும். சுறுசுறுப்பு பெருகும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பு பெருகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய நட்பில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். விவசாயம் பலன் தரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். கோரிக்கைகள் நிறைவேறும். பெற்றோர் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கை பிடிப்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நன்மதிப்பு கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். கடன் சுமை குறையும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. தாராளமான தனவரவு உண்டு. கனவுகள் பலிதமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். மருத்துவச் செலவு குறையும். நினைவாற்றல் பெருகும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 7,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,M




**துலாம்:** வரவும், உறவும் வலிமையாகும். பகை மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பயணங்கள் பலன் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத்தொழில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். மனச்சுமை குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் வாங்க நேரிடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அன்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வேண்டாத உறவுகளைத் தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். நிர்வாகப் பொறுப்பு கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அரசியல் ஆதாயம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெகுமானம் கிடைக்கும் காலம். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பெண்களால் பெருமை சேரும். தனவரவு உண்டு. செயல்திறமை வெளிப்படும். ஞாபக மறதி ஏற்படும். ஆன்மீக ஈடுபாடுகள் அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். சுபச்செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். கருத்து வேறுபாடுகள் விலகும். புத்தி சாதுர்யம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W




**விருச்சிகம்:** ஆசைப்பட்ட பொருள் சேரும் வாரம். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். பண தேவைகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். அலைச்சல் ஆதாயம் தரும்.

**(தொடர்ச்சி 22 பக்கம்)**

# இந்தியாவில் சிலம்பம் கராத்தே போட்டிகளில் வெற்றிகளைத் தட்டிக் கொண்ட வடமாகாண மாணவர்கள் கௌரவிப்பு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



இந்தியா மதுரையில் இடம்பொற்ற சிலம்பம் மற்றும் கராத்தே போட்டிகளில் 36 முதலிடங்களைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு 29ம் திகதி அன்றைன்றையதினம் புதன்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன் தலைமையில் மானிப்பாய் அன்னை மரியாள் ஆலயத்திற்கு முன்னால் இடம்பொற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து சிவலீமன் சிலம்ப கழக மாணவர்களும் பாபு இீன் ரியூ கராத்தே பாடசாலை மாணவர்கள் உள்ளடங்கிய 20 பேர் கொண்ட குழு இந்தியா மதுரையில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான கராத்தே மற்றும் சிலம்பம் போட்டியில் பங்கு பற்றினர்.

போட்டியில் பங்கு பற்றிய வடக்கு மாணவர்கள் 36 முதல் பரிசுகளையும், 08 இரண்டாவது பரிசுகளையும், 05 மூன்றாவது பரிசுகளையும் பெற்றதோடு 95 கேடயங்களை தம் வசமாக்கினர்.



போட்டிகளில்பங்குபற்றிய மாணவர்கள் 29ம் திகதி அன்று புதன்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்காது.

# மறைந்த மாவை சேனாதிராஜாவிற்கு தமிழ் தலைவர்கள் இறுதியஞ்சலி



**- நடராசா லோகதயாளன்**

இலங்கையின் தமிழ் அரசியல் களத்தில் நீண்ட கால அனுபவத்தை கொண்ட மாவை சேனாதிராஜா என அறிமுகம்கொண்ட சோமசுந்தரம் சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வுகள் 2ம் திகதி ஞாயிறு மாலை இடம்பெறவுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் தலைவரான மாவை சோ. சேனாதிராஜா, 1942 ஜனவரி 29, அன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காலமானார்.

83 வயதான இவரின் இழப்பு தமிழ் அரசியல் வரலாற்றில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதாக பதிவிடப்படுகின்றது.

தமிழர் உரிமைகளுக்காக தொடர்ந்து தனது வாழ்வை அர்ப்பணிக்கப்பனித்து விடுதலைப் பயணத்தில் பயணித்தார். 1942 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த சோமசுந்தரம் சேனாதிராஜாவே உலகளவில் ”மாவை” என்று அழைக்கப்பட்டார்.

காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியில் கல்வி கற்ற இவரி. தனது வாழ்நாள் முழுவதும் தமிழர் உரிமைகளுக்காகப் போராடியவர், அனுபவம் வாய்ந்த மூத்த அரசியல்வாதி,

ஈழத் தமிழர்களின் போராட்டத்திற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த தலைவர்களில் ஒருவர்.

மாவிட்டபுரத்தை சொந்த இடமாக்கொண்ட இவர், 1961 ஆம் ஆண்டு எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் இணைந்து சத்தியாகிரகத்தில் தீவிரமாகப் பங்கேற்றார்.

தனது செயல்பாட்டிற்காக இலங்கை அரசால் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார், மொத்தம் ஏழு ஆண்டுகள் சிறையிடப்பட்டார்.

விடுதலை இயக்கத்தில் ஒரு இளம் ஆர்வலராக இருந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் பின்னர் தலைவராகவும் பணியாற்றுவது வரை, அவரது பயணம் அர்ப்பணிப்புடன் இருந்தது.

2015 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அதிகபட்சமாக 58,782 விருப்பு வாக்குகளுடன் இவரி பெற்ற வெற்றி ஒப்பிடமுடியாத அரசியல் வாழ்வில் ஈர்ப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. கடந்த 2001ம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற சக்தியை உருவாக்க இவரின் பங்கு காத்திரமாக அமைந்திருந்தது.

நல்லாட்சிக் காலத்தில் வலி வடக்கு மீள்குடியேற்றத்திற்காக அரும் பாடுபட்டு பல காணிகள் விடுவிப்பதற்காக கடுமையாக உழைத்தார். இவரது மறைவு தமிழ் அரசியலில் ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது.

இவரது இறுதிக் கிரியைகள் வரும் 2ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை சமயச் சடங்குகள் நடைபெற்று 10 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

பின்பு தகனக் கிரியைகளுக்காக உடல் கீரி-மலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

இவரது மறைவு தொடர்பில் கட்சியின் செயலாளரான ப.சத்தியலிங்கம் தெரிவிக்கையில், மாவை தமிழினத்தின் அரசியல் விடிவிற்காக இறுதிவரை போராடிய அரசியல் போராளி.

சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையின் வரலாற்றில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காக இறுதிவரை போராடிய ஒரு உன்னதமான போரா-ளி அமரர் மாவை சேனாதிராஜா என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஸ்ட தலைவரும், மூத்த அரசியல்வாதியும், முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராஜாவின் மறைவையொட்டி கட்சியின் பொதுச்செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மாவை அண்ணர் என்று அனைவராலும் வயதுவித்தியாசமின்றி அன்பாக அழைக்கப்பட்டவர் மாவை சோ.சேனாதிராஜா. யாழ்ப்பாண மண்ணின் புகழ்பூத்த மாவிட்டபுரத்தில் பிறந்த சோ.சேனாதிராஜாஅவர்கள் ஊரின் பெயருக்கு பெருமைசேர்த்தவராக மாவை சேனாதிராஜா என்று அனைவராலும் அழைக்கப்பட்டார். 1961ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் அரசியல் அடக்குமுறைகளுக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகதலைவர் தந்தை செல்வா அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டத்தில் தனது 19வது வயதிலேயே இணைந்து போராடியதோடு அன்னாரது அரசியல் பயணம் ஆரம்பமாகியது. இறுதி மூச்சுவரை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக ஜனநாயக ரீதியில் போராடியவர் மாவை சேனாதிராஜா.

1962ம் ஆண்டு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணியில் சேர்ந்து முழுநேர அரசியல் பயணத்தை ஆரம்பித்த மாவை சேனாதிராஜா அவர்கள் 1966 முதல் 1969 வரையில் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தில் செயலாளராகவும் 1972ல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராகவும் துடிப்புடன் செயற்பட்டவர். 1989ல் முதன்முறையாக பாராளுமன்ற அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்து 2020 வரையில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக பாராளுமன்றத்தில் ஜனநாயக வழியில் குரல் கொடுத்தவர். தனது அரசியல் பயணத்தில் பலதடவை சிறைவாசம் சென்றதுடன் தேர்தல் காலங்களில் அரசியல் எதிரிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையிலும் அரசியல் பணிகளை முன்னெடுத்த மாபெரும் தலைவர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் மறைவுக்கு பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் பல்வேறு பதவிகளை வகித்து கட்சியை வழிநடாத்தியவர். 2004ம் ஆண்டிலிருந்து 2014ம் ஆண்டு வரையில் கட்சியின் செயலாளராக 10 வருடங்கள் பணியாற்றியதுடன், 2014ம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் கட்சியின் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் 2024ம் ஆண்டுவரையில் ஏறத்தாள 10 வருடங்கள் கட்சியின் தலைவராக வழிநடாத்தியவர்.

அன்னாரின் இழப்பு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு பாரிய இழப்பாகும். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன் எடத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முற்போக்கு கூட்டணியின. தலைவரான மனோ கணேசன் தனது அஞ்சலியில்,

சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதி, இலங்கை தமிழரசு தலைவர், முன்னாள் யாழ் பாஉ என்ற தகைமைகளுக்கு அப்பால், அண்ணன் மாவை, ஒரு தமிழ் தேசிய அடையாளம் என்பது நிதர்சனம்.

இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா அவர்களின் மறைவு தொடர்பில் மனோ கணேசன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மிக நீண்ட காலமாக தமிழர் ஜனநாயக சாலையில் பயணித்த, மாவை சேனாதிராசா என்ற தமிழ் தேசிய வாகனம் நின்று விட்ட சம்பவம் இன்று நிகழ்ந்தே விட்டது. பல உணர்வு மிக்க தரிப்பிடங்களையும், கடவைகளையும், தமிழ் தேசிய அரசியல் தலைவர்களுடன் நான் கடந்து வந்துள்ளேன். இதிலேயே அண்ணன் மாவையுடன் மிக நீண்ட காலமாக நான் பயணித்தும் உள்ளேன்.



இன்றைய இந்த சோகத்தில், தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் பங்கு கொள்கிறோம். எங்கள் அனுதாபங்களை அவரை இழந்து வாடும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும், அவரது கட்சிக்கும், மக்களுக்கும் தெரிவித்து கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** பெண்களுக்கு அணிகலன் சேரும். மனஅமைதி அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வரவுகள் மிகுதியாகும். உடல் நலம் சீராகும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். ஆழமான மேன்மைகள் அமையும். பயணம் அனுகூலம் தரும். பொருளாதாரம் உயரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. அயல்நாட்டுப் பயணம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. பெண்களால் பெருமை உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். திடீர் பயணம் லாபம் தரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பதவி உயர்வு தாமதமாகும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,A




**தனுசு:** பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உயர் பதவி யோகமுண்டு. சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தெய்வ பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். பொருள் வரவு ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். பணியில் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். புதிய சிந்தனை உதயமாகும். பொறுப்புக்கள் கூடும். உள்ளம் மகிழும். உதவிகள் குவியும். இரகசியம் காப்பது நல்லது. முயற்சிகளில் வளர்ச்சி அடைவீர்கள். தொட்ட காரியம் ஜெயமாகும். இல்லத்தில் அமைதி கூடும். தேகப் பலன் கூடும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. ஆபத்துக்கள் விலகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். விரக்திகள் மறையும். வங்கி சேமிப்பு உயரும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். நலம் விளையும் வாரம். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். தேக பலம் கூடும். திருமண முயற்சி வெற்றி பெறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். முகப்பொலிவு கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பெயர், புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். புதிய நட்பு உருவாகும். தொழில் வளம் கூடும். முற்போக்கு சிந்தனை வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாருதி (அனுமன்), அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,F




**மகரம்:** புதிய எண்ணங்கள் உருவாகும் வாரம். குளிர்பான தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். நன்மையான காலம். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கர்ம வினைகள் அகலும். பணக்கட்டுப்பாடு அவசியம். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. தனவரவு பெருகும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காரியம் கைகூடும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரார்த்தனைகள் நிறைவேறும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். வீண் விரயம் தவிர்க்கவும். உறவுகளால் மதிப்பு உயரும். பாக்கிகள் வசூலாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலிகருப்புசுவாமி, அதிர்ஷ்ட எண்: 3,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P




**கும்பம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். எதிரிகள் உதிரியாவார்கள். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பாதகமாக சூழ்நிலைகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உடல்நலம் திருப்தி தரும். பெருமிதம் நிறைந்த காலம். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். சாதனை படைக்கும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். பூமியால் நன்மை உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும் வெகுமதியும் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,7,9,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,L




**மீனம்:** தலைசிறந்த பதவி கிடைக்கும் வாரம். எண்ணம் கைகூடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். அற்புதமான காலம். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. பொறாமைகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்கள் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் லாபம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை மாறும். வார்த்தைகளில் நிதானம் தேவை. செயல்களில் பொறுமை தேவை. சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். உடல்நலம் மேம்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K

# எங்கள் குலதெய்வம்
# (இன்னிசை வெண்பா)

---

*வேழ முகனை வருந்தித் துதித்திடப்*
*பேழை வயிற்றோன் பெருநிதி தந்தே*
*கணங்கள் நெருங்கிடாக் காத்திடும் காவல்*
*கணபதி என்கவிக்குக் காப்பு.*

*வருத்தலைவி ளான்பதி வான்புகழ் பூமி*
*மருத மரத்தின் மடியிலே தான்தோன்றி*
*முத்திரை காட்டும் விநாயகத் தேவனை*
*நித்தமும் சேவித்தல் நன்று.*

*முருகனின் அண்ணனே மோதகப் பித்தா*
*கரும்புடன் தேனையும் காரெள் கலந்துமே*
*காலம் தவறிடாக் காணிக்கை தந்தனை*
*கோலம் குறைவறக் காத்து.*

*குளக்கரை மாமருதில் கோலமாய்க் நின்று*
*விளக்குகள் ஏற்றி வணங்குவோர் விக்கினம்*
*போக்கும் துதிக்கைப் பகவனை வேண்டினால்*
*நீக்குவான் மாறிடா நோய்.*

*பார்வதி மைந்தனே பானை வயிற்றனே*
*சோர்வுடன் வந்தவர் சோகம் அறிந்தே*
*பரிவுடன் பாசமாய்ப் பாதுகாத் திட்ட*
*கரிமுகக் காட்சியைக் காட்டு.*

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL | CONSTRUCTION | COMMERCIAL | VACANT LAND | INDUSTRIAL



**OUR SERVICE**

RESIDENTIAL, COMMERCIAL

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CONTACT US

**NESAN**
Subramaniam

**416-908-5656**



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank | TD Canada Trust | NATIONAL BANK | RFA
FIRST NATIONAL FINANCIAL LP | Manulife | Desjardins
MCAP | HOME TRUST | EQUITABLE BANK | radius financial | RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524



# கிழக்கிலங்கையில் இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிய "கனடா உதவும் பொற்கரங்கள்" ஸ்தாபகர் விசு கணபதிப்பிள்ளை







கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்து இரண்டு வெவ்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கு நற்பணியை செய்த கனடா வாழ் உதவும் பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகருமான திரு விசு கணபதிப்பிள்ளை தாயகத்திலும் கடனாவிலும் வாழும் அவரது நண்பர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர் அண்மையில் மடக்களப்பு ∴துரைவந்திய மேடு அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன இது சமூக சேவையாளரும் கனடா உதவும் பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகருமான விசு கணபதிப்பிள்ளை அவர்களின் பூரண நிதி அனுசரனையில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன இதற்கு பிரதம அதிதியாக ஆசிரியர் வு.கொலின்' அவர்களும் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் பங்குபற்றி சிறப்பித்தமைக்கு உதவும் பொற்கரம் அமைப்பின் சார்பாக உதவும் பொற்கரம் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த 20-01-2025 அன்று கல்முனை.்.வி'ணு மகா வித்தியாலயத்தில் அதிபர் திரு ளு.கோகுல்ராஜ் தலமையில் 3ம் தவணையில் 1ம்,2ம்,3ம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பெடோ அமைப்பின் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டன இந்த நற்பணிக்குத் தேவையான முழு நிதி அன்பளிப்பை கனடாவாழ் சமூக சேவையாளரும் கனடா உதவும் பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகருமான விசு கணபதிப்பிள்ளை அவர்களின் அனுசரனையில் இடம்பெற்றது இதற்கு பிரதம அதிதியாக சமூக சேவகர் பிரதீபன் அவர்களும் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் பங்குபற்றி சிறப்பித்தமை வரவேற்கத்தக்கது பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பிரதம அதிதிகள் அணைவருக்கும் உதவும் பொற்கரம் அமைப்பின் சார்பாக உதவும் பொற்கரம் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். .இங்கு காணப்படும் படங்கள் மேற்படி பாடசாலை நிகழ்வுகளில் எடுக்கப்பட்டவையாகும்.

# The King Charles III Coronation Medals were presented to two Tamil Canadians by MP Salma Zahid

# மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் முடி சூட்டும் வைபவ நினைவு பதக்கங்களை இரண்டு தமிழ்க் கனேடியர்களுக்கு வழங்கிய எம்பி சல்மா சாகிட்





இங்கிலாந்தின் மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் முடி சூட்டும் வைபவ நினைவு பதக்கங்களை இரண்டு தமிழ்க் கனேடியர்களுக்கு வழங்கிய எம்பி சல்மா சாகிட் அவர்கள் கனடிய தேசத்திற்கு தமிழ் மக்கள் ஆற்றி வரும் தன்னலமற்ற தொண்டைப் பாராட்டிஉ உரையாற்றினார்.

கடந்த 26-01-2-25 ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்காபுறோ கென்னடி கொன்வென்சன் மண்டபத்தில் நடைபெற்ற அரச வைபவம் ஒன்றில் திருமதி இந்திராணி நாகேந்திரம் மற்றும் கனேந்திரன் செல்வராஜா ஆகிய இரண்டு தமிழ்க் கனேடியர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் வழங்கினார். அவர்களோடு 30க்கும் மேற்படி ஏனைய சமூகங்கள் சார்ந்தவர்களும் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றனர்.

# கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகம் நடத்திய "பொங்கல் விழா" சிறப்பாக நடைபெற்றது




கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் நீண்ட காலமாக நேர்த்தியாக இயங்கிவரும் கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகம் கடந்த 26-01-2-25 ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்திய "பொங்கல் விழா" சிறப்பாக நடைபெற்றது.

ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் தனித்தனியாக நடத்தப்பெற்றன. கழகத்தின் தலைவர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களான கவிஞர் பெருமக்கள் ஒன்றாகக் காணப்படுகின்றார்.

அவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

# மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் முடி சூட்டும் வைபவ நினைவு பதக்கத்தை சிவஸ்ரீ விஜயகுமாரக்குருக்களுக்கு வழங்கிய எம்பிபி அரிஸ் பாபிகியன்



இங்கிலாந்தின் மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் முடி சூட்டும் வைபவ நினைவு பதக்கத்தை வரசித்தி விநாயகர் ஆலய ஸ்தாபகர் சிவஸ்ரீ விஜயகுமாரக் குருக்கள் அவர்களுக்கு வழங்கிய எம்பிபி அரிஸ் பாபிகியன் அவர்கள் கனடிய தேசத்திற்கு தமிழ் மக்கள் ஆற்றி வரும் தன்னலமற்ற தொண்டைப் பாராட்டிஉ உரையாற்றினார்.

கடந்த 28ம் திகதி அன்று ஸ்காபுறோ வரசித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் எம்பிபி அரிஸ் பாபிகியன் அவர்கள் சிவஸ்ரீ விஜயகுமாரக் குருக்கள் அவர்களின் குடும்பத்தினரிடம் பதக்கத்தை ஒப்படைத்தார்.